Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

..ங்கங்கள் -10

..தம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -15 01-11-2003 சனிக்கிழமை ஓசை 256

அழகன் ஓப்செற் பதிப்பகம்
வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புகளுக்கும்
■ தரமான முறையில்
■ கணினி முறையில்
■ குறித்த தவணையில்
செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம்.
யாழ். சாலை, கிளிநொச்சி.

# இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு நோர்வேயிடம் புலிகளால் சமர்ப்பிப்பு

## நோர்வேத் தூதுவர் கான்ஸ்பிரஸ்காரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் கையளித்தார்

(அலுவலக செய்தியாளர்)

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப்புலிகளால் தயாரிக்கப் பெற்ற திட்டவரைவு நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்காரிடம் கையளிக்கப்பட்டது.**

நேற்றுக்காலை 11.30மணிக்கு கிளிநொச்சி விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரால் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தயாரிக்கப் பெற்ற திட்ட வரைவு சிறிலங்கா அரசாங்கத்திடம் கையளிப்பதற்கென சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்காரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சார்ந்த செல்வி, ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். நோர்வேத் தரப்பில் இலங்கைக் கான நோர்வேத் தூதுவர் கான்ஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)



## நியூசிலாந்து பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் நியூசிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினரும் கிறீன்காட்சிப் பிரமுகருமான கெயித் லேக்கி அவர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார். காலை 10 மணிக்கு ஆரம்பமான மேற்படி சந்திப்பு 11.15 வரை நீடித்தது. விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.



(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் திட்டவரைவு நோர்வேயினால் நேற்று சிறிலங்கா அரசிடம் சமர்ப்பிப்பு

### இன்று அரசாங்கம் அறிக்கை வெளியிடலாம்

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்திடம் வழங்குவதற்காக சமர்ப்பித்த இடைக்காலத் திட்ட வரைவு இன்று பிற்பகல் விசும்பாயவில் வைத்து அமைச்சர் ஜீ. எல். பீரிஸிடம் நோர்வேத்தூதுவர் கான்ஸ் பிரஸ்காரால் கையளிக்கப்பட்டது.

இந்த வரைவு தொடர்பில் அரசாங்கம் இன்றைய தினம் சுருக்கமான அறிக்கையொன்றை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம் வரைவின் பிரதிகள் தற்சமயம் அமெரிக்காவுக்கு பயணித்து கொண்டிருக்கும் பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

பிரதம மந்திரிக்கு அனுப்பி வைக்கப்படும் வரைவின் பிரதியே லண்டனில் தற்சமயம் சமஸ்டி தொடர்பான தெளிவை பெறச் சென்றிருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

அதேவேளை இரண்டு தரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முகமாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், மற்றும் சிறப்பு தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் ஆகியோர் எதிர் வரும் 10 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர். (32)

## சமாதான முயற்சிகளில் சந்திரிகாவின் தலையீடு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்

### -நோர்வே வெளிவிவகார அமைச்சர்

சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சியில் தொடர்ந்து தலையீடு செய்வது அம்முயற்சிக்கும் அதில் நோர்வேயின் பங்களிப்பிற்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என நோர்வே வெளிவிவகார அமைச்சர்ஜோன் பீற்றசன் எச்சரிக்கை விடுத்துள்ளதாக நோர்வே பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

ஏலவசனை விலக்க வேண்டும் எனக் கூறும் சனாதிபதியின் கோரிக்கை நாட்டில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இருப்பதை பாதிக்கும் என நோர்வேப் பேச்சாளர் கூறியுள்ளார்.

## அம்பாறை முஸ்லிம் வாழ் பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினால் விடுக்கப்பட்ட ஹர்த்தால் அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் வாழ் பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிண்ணியா, மூதூர், முள்ளிப்பொத்தானை பிரதேசங்களில், முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் சம்பவங்களைக் கண்டித்தும்,

முஸ்லிம்களின் உயிர், உடமை, பாதுகாப்பு போன்ற விடயங்களில் அக்கறையற்றிருக்கும் அரசைக் கண்டித்தும்,

முஸ்லிம்-தமிழ், முஸ்லிம்-சிங்கள உறவினைச் சீர்குலைத்து, அதன்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வாகனத்தில் பதுக்கி வைத்திருந்த ஆயுதம் கிளி.யில் காவல்துறையினரால் கண்டுபிடிப்பு

### - இரு சிங்கள இனத்தவர்கள் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வாகனமொன்றில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதமொன்று கிளிநொச்சி காவல் பணிமனையினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதனை எடுத்துச் சென்ற இரு சிங்கள இனத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் கிளி நொச்சிப் பிரதேசத்தில் அமைந் துள்ள ஏ-9 பாதையில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் கிளிநொச்சி காவல்பணிமனையினர் ஈடுபட்டிருந் தனர். அவ்வேளை பிற்பகல் சுமார் 4.30 மணியளவில் சந்தேகத்தின் பெயரில் வாகனம் ஒன்றினை மறித்து சோதனையிட்ட போது அவ் வாகனத்தில் இருந்தவர்கள் தாம் ஏ-9 பாதை வீதி புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் என்றும், மிக அவசரமாக செல்ல வேண்டும் என்றும் சந்தேகத்திற்கிடமான முறையில் மிகவும் பதட்டத்துடன் கூறி வாகனத்தினை எடுத்துச் செல்ல முற்பட்டனர். இதனால் மேலும் சந்தேகமடைந்த காவல்துறையினர் அவ் வாகனத் தினை நன்கு சோதனையிட்ட போது அவ் வாகனத்தில் ரி-56 ரக துப்பாக்கி ஒன்று உரப்பையினுள் ஒளித்து உருமறைப்புச் செய்யப் பட்ட நிலையில் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து இதில் சம்

(10ஆம் பக்கம் பார்க்க)

### - பருத்தித்துறை முனையில் -

## தாக்குதல் நடத்திய படையினர்மீது வழக்குத்தாக்கல் செய்யமுயற்சி

பருத்தித்துறை முனைப்பகுதியில் அப்பாவி பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி படையினருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்ய சில தரப்பினர் முற்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி முனைகடற்கரைப்பகுதியில் மீனவ இளைஞன் ஒருவன் தாக்கப்பட்ட சம்பவத்தின் தொடர்ச்சியாக அப் பகுதி மக்கள் மீது படையினர் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இதன்போது படுகாயமடைந்த இருவர் பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களால் பருத்தித்துறை பொலிசாருக்கு வழங்கப்பட்ட வாக்கு மூலங்களை அடிப்படையாகக்கொண்டே இவ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான சட்ட உதவிகள் அமைப்பு, மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன இணைந்து இவ் ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## வரி விளம்பரம்

### தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் தேவை

ஜெயபுரத்தில் உள்ள இள முருகன் நிழற்படப் பிரதியாக்கல் தட்டச்சு நிறுவனத்திற்கு மேற்படி அனுபவமுள்ள ஒருவர் தேவை 15.11.2003 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும். (சம்பளம் நேரில்) நிர்வாகி. (3134)

### விற்பனைக்குண்டு

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை 2004 விண்ணப்பப்படிவம் கந்தபுரம், பிக்பென்ஸ் (வாணி) புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். (சி-8681)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். உணவக ஓடருக்கு சுத்தம் செய்து கொடுக்கப்படும். இடம்: 155 ஆம் கட்டை, விவேகானந்த நகர், கிளிநொச்சி. புலிகளின் குரல் நடுவப்பணியக முன் ஒழுங்கை (தூரம் 300M). (3137)

### N. E. C

இம்முறை கிளிநொச்சி புலமைப் பரிசு ஆண்டு 5ற்கான மாதிரி வினா விடை வகுப்புக்கள் கொழும்பு பிரபல ஆசிரியரால் ஆரம்பப் பதிவுகளை 05.11.2003 இற்கு முன் செய்து பதிவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும். நிர்வாகம். (3143)


# நேற்று அக்கராயனில் சிறப்புற நடைபெற்ற 'வெற்றிமனை' 12ஆவது ஆண்டு நிறைவுவிழா

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் வெற்றிமனை மகளிர் உள வளத்துணை நிலையத்தின் 12ஆம் ஆண்டு நிறைவுவிழா அக்கராயன் குளக்கட்டு வீதியில் அமைந்துள்ள வெற்றிமனை வளாகத்தில் நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மாலை மூன்று மணிக்கு பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செல்வி சுதர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை நிறுவனப் பணிப்பாளர் சுதர்சினி ஆகியோர் ஏற்றின ர். வெற்றிமனை கொடியினை வெற்றிமனை இயக்குனர் அகிலேஸ்வரி ஏற்றி வைத்தார். ஆசியுரையினை அருட் தந்தை ஜெயசீலன் ஆற்றினார். சிறப்புரையினை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

களுக்கான சான்றிதழகள் மற்று பரிசுகள் வழங்கப்பட்டன. இவற் அரசியல்துறை துணைப் பொறு பாளர் சோ.தங்கன், மாலதி படையணி சிறப்புத்தளபதி, கேணல் விதுஷா, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்பரசன், மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். இனியவன் உள்ளிட்டோர்










சினி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பொதுச் சுடரினை பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன ஆலோசகர் திருமதி கௌரி, திருமதி பொன் தியாகம் ஆகியோர்

தொடர்ந்து வெற்றிமனை மகளிர் உளவளத்துணை நிலையத்தின் பன்னிரெண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ் இதழை வெற்றி மனையின் மூத்த பயனாளியான சரசலட்சுமி வெளியிட்டு வைக்க மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா பெற்றுக் கொண்டார்.

அடுத்து வெற்றிமனையின் 12ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பயனாளிகளிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவா வழங்கிக் கௌரவித்ததுடன் மேற்படி நிறுவனத்தின் பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பரிசளிப்பு நிகழ்வு நிறைவு பெற்றதும் நிறுவனத்தில் பயன் பெற்று வரும் பயனாளிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் தமிழீழ மகளிர் இசைக்குழுவினரின் இசை நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ் வில் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தமை குறிபபிடத் தக்கது. (லோ)

# சிறுவர்தினப் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப்பரிசு

துணுக்காய் பிரதேசத்தில் ஒக்டோபர் - 01 சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலைமாணவர்களுக்குள்ளேயே துணுக்காய் வலயக் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கட்டுரை கவிதைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வு கடந்த 28ம் திகதி நடைபெற்றது.

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் தி.ரத்தினம் தலைமையில் மல்லாவி மத்திய கல்லூரியில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினர்களாக துணுக்காய் வலய கல்விப்பணிப்பாளர் மா. தெய்வேந்திரம் அவர்களும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார். தேசியக்கொடி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. இதில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (24)

# தவளைத்தாக்குதல் வெற்றிவிழா; விளையாட்டுப் போட்டி ஏற்பாடு

(பூநகரி)

தவளைத் தாக்குதல் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி வெற்றி விழா விளையாட்டுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் கைப்பந்து போட்டி தம்பிராய் அண்ணா விளையாட்டுக் கழகத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் கிளிநொச்சியில் தமிழீழ விளையாட்டுக்கழக நடுவப் பணியத்திலும், பூநகரியில் மன்னார் வீதி 4ம் கட்டையில் உள்ள வெண்புறா நிறுவனத்திலும்' பதிவு செய்து கொள்ளவும், இறுதிநாள் நிகழ்வாக கிளிநொச்சியில் இருந்து பரந்தன் ஊடாக மரதன் ஓட்டமும் வெற்றி விழா அன்று நடைபெறும். இது தொடர்பான ஏற்பாடுகளை வெற்றி விழாக் குழுவும், கடற்புலி அரசியற் பொறுப்பாளரும், வன்னி விளையாட்டுக்கழகப் பொறுப்பாளரும், பூநகி ஒருங்கமைப்பு விளையாட்டுக் குழுத தலைவர் ஊடாக செய்துள்ளனர். (34)

# முப்படை அதிகாரம் யாருக்கு? உயர் நீதிமன்ற விசாரணை

முப்படைகளின் சில நடவடிக்கைகள் தொடர்பாக சனாதிபதிக்கா அல்லது பாதுகாப்பு அமைச்சருக்கா நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளன. என்பதைத் தீர்மானித்து தெரிவிக்குமாறு சனாதிபதி சமர்ப்பித்த மனு மீதான விசாரணைநேற்று நடைபெற்றது.

அதன் தீர்ப்பு 10நாட்களுக்குள் சனாதிபதிக்கு அனுப்பவுள்ளதாக நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது. சனாதிபதி சட்டத்தரணி எச்.எல். டி.சில்வா மனுமீதான விசாரணையின் போது கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் யாப்பிற்கமைய நாட்டின் பாதுகாப்பு உட்பட நிறைவேற்று அதிகாரங்களை நேரடியாகக் கொண்டிருப்பதாக கூறியுள்ளார். இவ் அதிகாரங்கள் எந்த விதத்திலும் கைவிடமுடியாதென அவர் வாதிட்டுள்ளார்.

இதே வேளை பிரதம நீதியரசர் சரத் என்சில்வா நாட்டின் பாதுகாப்பு சனாதிபதியின் நிலையான உரிமை என அரசியல்யாப்பு குறிப்பிடுகிறதென்றால் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிப்பதன் காரணம் என்ன என வினவியுள்ளார்.

எச்.எல்.டி சில்வா இதற்குப் பதிலளிக்கையில் கடந்த பொதுத் தேர்தலில் நிர்வாக அதிகாரம் மற்று மொருகட்சிக்கு மாற்றப்பட்டதன் காரணமாகவே பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிக்கும் நடவடிக்கையை சனாதிபதி மேற்கொண்டதாகக் கூறியுள்ளார். சகவாழ்வு அரசாங்கம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இந்த நியமனம் அவசியமாகிறதென அவர் மேலும் கூறியுள்ளார்.

சட்டமா அதிபர் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை அமுலாக்கும் பணியை பாதுகாப்பு அமைச்சர் மேற்கொள்வதாகக் கூறியுள்ளார். இதனால் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக வழங்கும் அதிகாரங்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு உண்டு என கூறியுள்ளார். இவ் விடயத்தில் பிரதம நீதியரசர் நாட்டின் பாதுகாப்பு சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமாகுமென கூறியுள்ளார். இவ் அதிகாரங்களை கைவிடுவதோ அல்லது மாற்றுவதோ சனாதிபதி அரசியல்யாப்பை மீறுவதாக கருதப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார். (32)

# 2லட்சம் பனை நடுகைத் திட்டம் யாழ்.கப்புது பகுதியில் ஆரம்பம்

குடாநாட்டில் இரண்டரை லட்சம் பனம் விதைகளை நடும் நிகழ்வு இன்று வைபவரீதியாக நடைபெறவுள்ளது.

வடமராட்சி கப்புது என்ற பிரதேசத்தில் பனம் விதை நடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சிவபாலன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## யுனிசெவ் நிறுவனம் உதவி

முல்லைமாவட்ட பதிவகத்தில் இறப்பு பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களின் தேவைகள் அதிகரித்துள்ளன. இந்த வேளையில் வன்னி யுனிசெவ் நிறுவனத்தால் மின்பிறப்பாக்கியும் நிழற்பட இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இவ்வியந்திரங்களின் உதவியுடன் தேக்க நிலையில் உள்ள அத்தாட்சிப்பத்திரங்கள் உடன் மக்களுக்கு வழங்கப்படுகின்றது என முல்லை மாவட்ட மேலதிகப் பதிவாளர் தெரிவித்தார். (20)


## ஏல விற்பனை

கிளி.மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பதிப்பகத்தின் பாவனையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரமும் துவிச்சக்கரவண்டியும். ஏலத்தில் விற்கப்படவுள்ளது. ஏல விற்பனை எதிர்வரும் 12.11.2003 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் பார்வையிடுவோர் அதற்கு முன்பாக அலுவலக நாட்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

மாவட்டச் செயலாளர்,
சி.க.கூ. சமாசம்,
கிளிநொச்சி.

(சி8688)



## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 12 □ 10 □ 1943



உதிர்வு 03 □ 10 □ 2003

அமரர்
**திருமதி அருமைத்துரை—உருக்குமணி**
**கள்ளப்பாடு, முல்லைத்தீவு.**

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்புமிக்க எம் ஒளிதீபமே
மாதம் ஒன்று சென்றாலும்
மாறுமா எம் அன்பு.
உங்கள் ஆத்மா சாந்தயடைய
வேண்டி வாழ்வின் பயணத்தை
தொடர்கின்றோம் - அம்மா....

03.11.2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிநிற்கின்றோம்.

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

(3722)

கணவர் அருமைத்துரை
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஈராக்கில் எந்தநேரத்திலும், எவ்விடத்திலும், யாராலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம்

**- தம்மால் தடுக்கமுடியும் என்கிறார் அமெ. பாதுகாப்பு அமைச்சர்**

(பாக்தாத்)

**ஈராக்கில் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அங்கு இடம்பெற்றுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எவ்வித தடையையும் ஏற்படுத்த முடியாதென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் பத்திரிகையாளரிடம் கருத்துக் கூறும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.ஸ்தாபனம் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார். பயங்கரவாதத் தாக்குதல்கள் எந்நேரத்திலும், எவ்விடத்திலும், யாராலும் மேற்கொள்ள முடியுமென கூறியுள்ளார். அத்துடன் இதற்கான மாற்று நடவடிக்கைகளை நாமே மேற்கொள்ள முடியுமென கூறியுள்ளார்.

இப் பிரச்சினைக்குக் குறுகிய காலத்தில் தீர்வு எதனையும் காணமுடியாது. நீண்டகாலம் திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலமே பயங்கரவாத தாக்குதலுக்கு தீர்வுகாணமுடியுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஈராக்கில் செயற்படும் ஒவ்வொரு நிறுவனமும் அதில் கடமையாற்றும் ஒவ்வொருவரும் எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பது பற்றி அவர்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டுமென்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.


ஈராக்கின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் நிலைமை சுமுகமாகிவிட்டதென கூறிய அவர், ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஈராக்கிய மக்களுக்கு இராணுவ பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதென கூறியுள்ளார்.

## ஜப்பானில் பூமியதிர்ச்சி

(டோக்கியோ)

ஜப்பானின் வடபகுதியில் பூமி அதிர்ச்சி நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக டோக்கியோவில் கட்டடங்கள் அதிர்ந்துள்ளன. இப் பூமிஅதிர்ச்சி றிக்டர் அளவுகோலில் 6.8 என பதிவாகியுள்ளது.



இராணுவ விநியோகங்களை மேற்கொள்ளும் ரயில் வண்டியொன்று மேற்கு பாக்தாத்தில் ஈராக்கியரால் மறிக்கப்பட்டு இதிலிருந்து கணினிகள், கூடாரங்கள் என்பன பறித்தெடுக்கப்பட்டுள்ளன.

# ஈராக்கின் புனரமைப்பிற்கு 8700 கோடி டொலர் அமெ.மக்கள் பிரதிநிதிகள் சபை அங்கீகாரம்

(வாஷிங்டன்)

ஈராக்கில் மேற்கொள்ளவுள்ள புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை 8 ஆயிரத்து 700 கோடி டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இதற்கான இறுதி அங்கீகாரம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இச் சட்டம் செனற் சபையிடம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும். செனற்சபையிடம் இது அங்கீகரிக்கபட்டவுடன் சனாதிபதியின் கைச்சாத்துடன் இதற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும்.

இச் சட்ட மூலத்தின் அடிப்படையால் ஈராக்கின் புனரமைப்பிற்கு அமெரிக்க சனாதிபதி கூறிய நிதி முழு அளவில் கிடைக்கப்படுகின்றதென அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கில் சமாதானப் பாதை திட்டத்தை அங்கீகரிக்க ரஷ்யா கோரிக்கை

(மொஸ்கோ)

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சமாதானப் பாதை திட்டத்தை அங்கீகரிக்க வழிவகுக்கும் தீர்மானம் ஒன்றை ரஷ்ய அரசு ஐ.நா சபையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத் திட்டத்தின் மீதான வாக்களிப்பை அடுத்த வாரம் நடத்த வேண்டும் என கோரப்போவதாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது. ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை ஆகியன வடிவமைத்த சமாதான திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் ஊட்ட வேண்டுமென ரஷ்யா விரும்புகிறது. இப்பாதை வரைபடம் இஸ்ரேலிய பலஸ்தீனர்கள் குறித்த இலக்கை அடைவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை வரையறுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



விசேட உடையணிந்த தீயணைப்புப் படையினர் தீயணைப்பில் ஈடுபட்டுள்ளனர். தெற்குக் கலிபோர்னியாவில் காட்டுத்தீயினை அணைக்க இவர்கள் போராடுகின்றனர். காற்றினால் அடித்துச் செல்லப்பட்ட தீச்சுவாலைகள் சரித்திரம் வாய்ந்த சான் டைகோ நாட்டின் மலை நகரை அழித்துவிட்டதாக மாகாண தீயணைக்கும் அலுவலகம் கூறுகிறது.

## ஈராக்கிலுள்ள ஐ.நா. அலுவலகத்திலிருந்து வெளிநாட்டவரை வாபஸ் பெற கொபி அனான் முடிவு

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள செஞ்சிலுவைச் சங்க கட்டடம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐ.நா அலுவலகத்தில் கடமையாற்றும் வெளிநாட்டவர்களை தற்காலிகமாக வாபஸ் பெறுவதென கொபி அனான் தீர்மானித்துள்ளார்.

இத் தீர்மானத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மேற்கொண்டுள்ளது. இதனிடையே அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் தொலைபேசிமூலம் கொபிஅனானுடன் தொடர்பு கொண்டு ஐ.நாடுகள் அதிகாரிகளை வாபஸ் பெற வேண்டாமெனக் கூறியுள்ளார். ஏற்கனவே உலக சுகாதார ஸ்தாபனம், ஐ.நாடுகள் சிறுவர் நிதியம் என்பன அங்கு கடமையாற்றும் வெளிநாட்டவர்களை வாபஸ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆபிரிக்க சமாதான நடவடிக்கைக்கு ஐரோப்பிய சமூகம் 29 கோடி டொலர் உதவி

(லண்டன்)

ஆபிரிக்கக் கண்டத்தில் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென ஐரோப்பிய சமூகம் 29 கோடி டொலர்களை வழங்கவுள்ளது.

இந்நிதியுதவியை வழங்குவதன் மூலம் ஆபிரிக்கக் கண்டத்தின் பிரச்சினைகளுக்கு ஆபிரிக்க மக்களைத் தீர்வு காண வழிவகுப்பதும் அதே வேளை சகல தரப்பினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே நோக்கமாகும் என ஐரோப்பிய சமூகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக நத்தார் பண்டிகைக்கு முன்னர் ஆபிரிக்க நாடுகள் தங்களது பிரேரணைகளை சமர்ப்பிக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஆபிரிக்க கண்டத்தில் எயிட்ஸ், மலேரியா, சலரோகம் என்பவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற் கொள்வதற்கு ஐரோப்பிய சமூகத்தின் அங்கத்துவ நாடுகள் மேலும் 20 கோடி டொலர்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தென்கொரியாவின் மேற்குக்கரை குசன் துறைமுகத்திற்கு ஒசாமாபின்லேடனின் அல்கைதா உறுப்பினர்களை ஏற்றிவந்ததாக சந்தேகிக்கப்பட்ட அதெனாடோக்ஸ் எனப்படும் கப்பல். இதில் மரத்தளபாடங்களே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சமாதான யோசனைகளுக்கு பாகிஸ்தான் ஒவ்வாத தாமதங்களை ஏற்படுத்துகின்றது

**- குற்றச்சாட்டை முன்வைக்கிறது இந்தியா**

(புதுடில்லி)

இந்தியா தெரிவித்துள்ள யோசனைகளுக்கு பாகிஸ்தான் நடைமுறைக்கு ஒவ்வாத தாமதப்படுத்தும் நிபந்தனைகளை விதித்துள்ளமை குறித்து இந்தியா ஏமாற்றம் தெரிவித்துள்ளது.

எனினும் பாகிஸ்தானின் சில கருத்துக்கள் ஆக்கபூர்வமானவையெனக் கூறி அது வரவேற்றுள்ளது. பாகிஸ்தான் தெரிவித்துள்ள கருத்து பற்றி வெளியுறவு அமைச்சராக செயற்பட்டு வரும் தொடர்பாளர் கூறுகையில், காஷ்மீர் தாவாவிற்கு உட்பட்ட பகுதி அல்ல என அவர் கூறியுள்ளார். அத்துடன் அம்மாநிலத்தின் ஒருபகுதியை பாகிஸ்தான் சட்ட விரோதமாக ஆக்கிரமித்திருப்பது தான் இறுதித் தீர்வு காணவேண்டிய பிரச்சினையாக உள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார். பயங்கரவாதத்திற்கு ஆதரவு கொடுப்பதை மூடிமறைப்பதற்காகவே காஷ்மீரில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைபற்றி பாகிஸ்தான் அக்கறை காட்டுகிறது. பாகிஸ்தான் உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்குமானால் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஏவி விடுவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்

இந்தியா பாகிஸ்தானுடன் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன் 12 அம்சத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது. இதில் இரு நாடுகளுக்கிடையே விமானப் போக்குவரத்தை தொடங்குவதற்கும் ஆலோசனை கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசு வடக்கு கிழக்கு மாகாணம் வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்கடன் இல : 2880 - சி.இ.(C.E)

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல் நிர்மாண வேலைகள்

# மீள் கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி. (I.F.B)

**ஐ.எவ்.பி.இல: கிளி/நீர்ப்/01** **திகதி 30 - 10 - 2003**

01) வடக்கு கிழக்கு துரிதமீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D)கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.

02) அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தாரர்களிடமிருந்து பின்வரும் கூட்டத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்ற.

03) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான, அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 01.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
பழையகமம், முரசுமோட்டை,
பரந்தன், கிளிநொச்சி.

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்வி திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டுப் பின்வரும் முகவரிக்கு 02.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

06) வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்விக் குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நீர்ப்/சுவே/1 | வைத்திய அதிகாரி விடுதி மீள்நிர்மாணம். சுற்றயற்கூறு,பளை. | 53,300/= | 750/= | 04மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/2 | வெளிநோயாளர் பிரிவு மீள்நிர்மாணம் சுற்றயற்கூறு, பளை. | 93,000/= | 750/= | 05மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/3 | வெளிநோயாளர் பிரிவு மீள்நிர்மாணம் சுற்றயற்கூறு, பூநகரி. | 93,000/= | 750/= | 05மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/4 | வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம், கரைச்சி. | 53,000/= | 750/= | 04மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/5 | உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம், சுற்றயற்கூறு, பூநகரி. | 41,200/= | 750/= | 04மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/6 | உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம், மத்திய மருந்தகம், வேராவில். | 41,200/= | 750/= | 05மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசெ/1 | பிரதேச செயலகமும் பிரதேச செயலாளருக்குரிய விடுதியும் மீள் நிர்மாணம், கரைச்சி,கிளிநொச்சி. | 302,800/= | 1000/= | 15மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசெ/2 | உத்தியோகத்தர்களுக்கான விடுதி மீள் நிர்மாணம், மாவட்ட செயலகம்,கிளி. | 132,200/= | 1000/= | 08மாதங்கள் |

07) கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள்04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒருதனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**தி.இராசநாயகம்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச்செயலகம்,**
**கிளிநொச்சி.**

(சி-8682)

# கொள்ளை நோய் பற்றி

"லெப்டஸ்பை ரோசி" என உலகெங்கும் காணப்படும் "கொள்ளைநோய்" எலிகள் மூலம் பரவுகிறதுநோய் இலங்கையிலும் பரவியுள்ளது.

இவ்வகை நோயாளி ஒருவர் 1953ஆம் ஆண்டு இனங்காணப்பட்டார். 1960 ஆண்டுகளில் குறைவான அளவினர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பினும்1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதிக்கப்பட்டோர்தொகை அ[illegible]கமாகும். இதன்படி 1994ஆம் ஆண்டு 1300பேர் இந்நோய்குள்ளானார்கள். எனினும்95,96,97 ஆண்டுகளில் 800பேருக்கு இத் தொற்று ஏற்பட்டது. 1998ஆம் ஆண்டுமுதல் 2001வரை 1400பேர் இந் நோய்க்கு உள்ளாகியுள்ளனர். அது மேலும் அதிகரித்து 2003 ஆண்டு ஐப்பசி மாதத்தின் புள்ளி விபரப்படி 1500பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நோய் பரவும் பாரம்பரிய இடங்களாக மொனறாகலை, அம்பாறை,கம்பஹா,ராகம ஆகியன குறிப்பிடப்பட்டினும் 1994ஆம் ஆண்டில் வேறு பல நகரங்களிலும் பரவியிருப்பதாகக் கூறப்படுகிறது.

முதலில் கொழும்பையும் அதனைபண்டிய பிரதேசங்களையும் விசேடமாக ஹோமாகம,கடுவல பிரதேசங்களில் அதிகளவானோர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மதிப்பீட்டுத்திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதற்கு முக்கியகாரணம் சுற்றுச்சூழல் மாசடைதல் எனவும் நகர்ப்புறங்களில் காணப்படும் சுத்தமின்மையே ஆகும்.

இந்நோய் பக்டீரியா மூலம் பரவுவதாகும். "லெப்ரங்பயர்ஸ்" எனப்படும் ஸ்பைடொகியைக் கொண்டுள்ள எலிக்குடும்பத் தைச்



சேர்ந்த எலிகளால்பரவும் இந் நோக்கு எலிகள் மட்டும் காரணம் எனக்கூறப்படுவது பொருத்தமற்றது. ஏனெனில் ஸ்பைடொக்கியாக்களை கொண்டிருக்கும் பசுக்கள், பன்றி,ஆடு, நாய்,பூனை, மான், நரிபோன்ற மிருகங்களினாலும் இந் நோய் பரவும். இம் மிருகங்களின் சிறுநீரகங்களில் காணப்படும் நோய்க்கிருமிகள் அவற்றின் சிறுநீர் மூலம் சூழலில் பரவி நீர்மூலமாக மனிதனை அடைகின்றது.

இந்நோய் ஒருவரை ஒருமுறை தாக்கினாலும் பின்னர் அவரை பாதிப்பதில்லை எனக்கூறமுடியாது. காரணம் இந்நோய்க் கிருமிகள் உள்ள பல இடங்கள் காணப்படுவதாகும்.

விவசாயம், மிருகவளர்ப்பு, நீர்ப்பாசனம், சுரங்கத்தொழில் ஆகிய தொழில்களில் ஈடுபடுவோரில் இக் கிருமிகள் தொற்றும்.

எனினும் 15வயது முதல் 60வயது வரையானவர்களே பெரிதும் பாதிக் கப்படுகின்றனர்.

எலித்தொல்லைகள் கூடிய இடங்களில் வசிப்போரும் சேற்று நீரில்குளிப்போரும் நோக் குள்ளாவர்.

இதன்போது மனிதரின் தோலின்மூலம் கிருமிகள் உடலினுட் செலகின்றன. மற்றும் காயங் கள் கீறல்கள் மூலமாகவும் கிருமிகள் உடலினுட் செல்லும்.

இந்நோயின் அறிகுறிகளாக காய்ச்சல்,தசைகளில்நோ,கண் மஞ்சல்நிறமாதல், சிவத்தல், கடுமையான தலையிடி, சோர்வு என்பன காணப்படும். இவற்றைக் கவனத்தில் எடுக்காது விடின் சிறுநீரகக் கோளாறு,நுரையீரல்,இதயம் போன்றவை செயலிழத்தல் ஏற்படும். இதற்கு உடன் சிகிச்சை பெறுவது அவசியமாகும்.

## பயன் மிக்க பசளிக்கீரை

வடஆசியாவுக்கே உரித்தான பசளிக்கீரை "செனோபொபிட்யேசி" இனத்தைச்சேர்ந்த தாவரமாகும். இது காலம்பூராவும் பயன்தரும் செடியாகவும் மனிதனுக்கு உணவாகிறது.

உடல்வெப்பத்தைக் கட்டுப்படுத்தி இரத்தவிருத்தியை ஏற்படுத்துவதோடு மலைச்சிக்கலை தவிர்க்கவல்லது. இதன் இலை, இளந்தண்டு என்பனவற்றை உணவாகப் பயன்படுத்தமுடியும். மற்றும் தண்டில் சூப் தயாரித்தும் அருந்துவது சிறந்தது.

இலங்கையின் அதிக ஈரவலயத்தைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இத்தாவரம் செழித்து வளரக்கூடியது. நீர்ப்பாசன வசதிகுறைவான பிரதேசங்களிலும் உயரமான பாத்திகளை அமைத்து நீரைப் பாய்ச்சி இதனைப் பயிரிடமுடியும்.

கொடிவகை:-

நட்டு40-50நாட்களில் அகன்ற இலைகளுடன் செடியாகக் காணப்படும் இவ்வகை பின்னர் நீண்ட கொடிபோன்று படரும். பச்சையாகவும், சிவப்பாகவும் இரு நிறங்களில் காணப்படும் கொடி வகைகளில் மக்களால் பெரிதும் விரும்பப்படுவது பச்சைநிறத்தைக் கொண்ட இனமே.

நோயற்றதும் செழிப்பாகவும் வளர்ச்சியடைந்த கொடிகளில் இருந்து பெறப்படும் விந்துக்களின் மேற்றோலை அகற்றி வெய்யிலில் காயவிட்டு பதப்படுத்திவைத்து நடுகைக்கு பயன்படுத்தமுடியும்.

15x15 செ.மீ. அளவில் தயாரிக்கப்பட்ட பாத்திகளில் நட்டு 40-50 நாட்களில் செடிகளின்மூலம் பயன் பெறலாம். கொடியாகப் படரவிடுவதாயின் 45x45 செ.மீ. அளவு பாத்தியமைத்து செடிகளைப்பந்தலிட்டு படரவிடமுடியும்.

பசளையிடும்முறை சாதாரண மரக்கறிவகைகளுக்கு பிரயோகிக்கும் முறை பொருத்தமாகும்.

## இந்தியா

தென்கிழக்காசிய நாடு. இதன் தலைநகரம் புதுடில்லி
மொத்தப் பரப்பு - 3287263 ச.கி.மீ
வடக்கு-தெற்கு தூரம் - சுமார் 3200 கி.மீ
கிழக்கு-மேற்கு தூரம் 1700 கி.மீ
மக்கள் தொகை 105 கோடி
லோக்சபை இடங்கள். - 545
(543+2 நியமனம்)
ராஜ்யசபை இடங்கள் -245
(233+12 நியமனம்)
மொத்த. சட்டசபை இடங்கள் -4052

### தேசிய மொழிகள் 18

கிந்தி, தெலுங்கு, வங்காளி, மராத்தி, தமிழ், உருது, குஜராத்தி, கன்னடம், மலையாளம், ஓரியா, பஞ்சாபி, காஷ்மீர, சிந்தி, அசாமி, சமஸ்கிருதம், கொங்கணி, மணிப்புரி, நேபாளி.

### முக்கிய சமயங்கள் :-

இந்து, இஸ்லாம், கிறிஸ்த்தவம், சீக்கியர், பௌத்தம் ஜைனர்,

### மாநிலங்கள் :-25

அருணாசலப் பிரதேசம், அசாம் ஆந்திரப் பிரதேசம், உத்திரப்பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், கோவா, சிக்கிம், தமிழ்நாடு, திரிபுரா, நாகலாந்து, பஞ்சாப், பீகார், மத்தியப் பிரதேசம், மணிப்பூர், மகாராஷ்டிரம், மிசோரம், மேகாலயா, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர், ஹரியானா, ஹிமாசலப் பிரதேசம்.

### மத்திய அரசின்ஆட்சிப்பகுதி-6

அந்தமான் நிகோபார் தீவுகள், இலட்சத்தீவுகள், சண்டிகார், டாமன்-டையூ, தாத்ராநாகர் ஹவேலி, பாண்டிச்சேரி.

## குழந்தை மருத்துவத்தில் நவீன வளர்ச்சி

குழந்தை மருத்துவம் என்பது மருத்துவத்துறையில் ஒரு சிறப்புப் பிரிவாக இருந்தாலும் அதில் நிறைய உட் பிரிவுகள் உள்ளன. உதாரணமாக ஒரு குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் போதே அதற்கு ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால் அதைக் கண்டறிந்து கருப்பையின் உள்ளேயே சிகிச்சை செய்ய முடியும். அதை போடல் திரப்பி என்பார்கள். முன்பெல்லாம் புதிதாக பிறந்த குழந்தைகள் மற்றும் எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாக இருந்தது. ஆனால் தற்போதுள்ள நவீன சிகிச்சைகள்மூலம் அது பல மடங்காகக் குறைக்கப்பட்டுள்ளது. இருதயவியல் துறையிலும், குணப்படுத்த முடியாத பல பிறவிக்கோளாறுகளுக்கு இப்போது அறுவைச் சிகிச்சைகள்வந்துள்ளன. இருதய மாற்று அறுவைச்சிகிச்சை கூட குழந்தைகளுக்கு செய்யவசதிகள்உள்ளன.

## உரிமைகள் (RiGHTS)

உரிமைகள் பற்றி பலவாறான கருத்துக்கள் முன் மொழியப்பட்டு அவை நடைமுறையில் உள்ளன. ஒரு அரசியல் சமுதாயத்தில் சேர்ந்து வாழும் மக்கள் நல்ல வாழ்க்கையை வாழ்வதற்காக அவர்கள் மானிட நடவடிக்கைகள் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட சில நியதிகளைக் கைக்கொள்ள அல்லது பின்பற்ற விரும்புகின்றனர். மேலும் அரசின் செயல்கள் அத்துமீறிச் செல்லும், அடக்கு முறையைப் பிரயோகிக்காமலும் மக்களைக் காப்பதற்கு உரிமைகள் அத்தியாவசியமாகும்.

உரிமைகள் மனிதனுக்கு வானத்திலிருந்து வந்து கிடைத்தவையல்ல. பல யுத்தகளங்களின் பின்னரும், உயிர் இழப்புகளின் பின்னுமே உரிமைகள் வென்றெடுக்கப்பட்டன. அவற்றுள் சில உதாரணம்.

1) 1776 ஆம் ஆண்டு அமெரிக்க சாசனம் எல்லா மனிதர்களும் கடவுளால் பிரிக்க முடியாத உரிமைகளுடன் படைக்கப்பட்டுள்ளனர்.

2) 1791 ஆம் ஆண்டு பிரான்ஸிய உரிமைகள் பிரகடனம் மனிதர்கள் பிறப்பால் சுதந்திரமானவர்கள், வாழ்வில் சுதந்திரமானவர்கள், தமது உரிமைகளில் சமமானவர்கள்.

3) 1948 ஆம் ஆண்டு மனித உரிமைப் பிரகடனம் பிறந்த மனிதர்கள் அனைவரும் தமது பெருமையிலும்,உரிமையிலும் சமமானவர்கள்.

இவற்றுள் போராட்டம் மூலம் உரிமைகளைப் பெற்றுக் கொண்டமைக்கு ஆதாரங்களாக கீழ் வருவன காணப்படுகின்றன.

1. 1688 ஆம் ஆண்டு ஆங்கிலப் புரட்சி
2. 1776 ஆம் ஆண்டு அமெரிக்கா சுதந்திரப் போர்
3. 1789 ஆம் ஆண்டு பிரான்ஸியப் புரட்சி
4. 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி

இதே வேளை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் படி ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

### குடியியல் (சிவில்) உரிமைகள்

ஒவ்வொரு வரும் தாம் விரும்பய மதம், கலாச்சாரம் என்பனவற்றைத் தீர்மானிக்கவும், பின்பற்றவும், பிரச்சாரம் செய்யவும் உரிமையுண்டு. கற்பதற்கும் சந்திக்கவும், பிரயாணம் செய்வதற்கும், விரும்பியவரை திருமணம் செய்யவும் உரிமையுண்டு.

இவ்வுரிமைகள் சமூக வாழ்க்கைக்கான அந்தஸ்தினை பெற்றுக் கொடுக்கின்றது. பொதுவாக சனநாயக நாடுகளில் சிவில் உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

### அரசியல் உரிமைகள்

விமர்சிக்கும், வாக்களிக்கும், போட்டியிடும், நிர்வாகத்தில் பங்குகொள்ளும், கட்சிகளை அமைக்கும், தாம் விரும்பாத அரசாங்கத்தை நீக்கும், எதிர்க்கட்சியினை அமைக்கும், பதவிகளை வகிக்கும் கூட்டங்களை நடத்தும் உரிமைகள் அரசியல் உரிமைகளுக்குள் அடங்கும்.

அரசியல் பங்கு பற்றுதல் சனநாயக விழுமியமாகும். சமூகத்தில் மனிதன் சிறந்தவனாக செயற்பட அரசியலுரிமை அவசியமாகும், அரசியலில் பங்கு கொள்ள சந்தர்ப்பத்தினையும் இவ் உரிமை வழங்கும்.

### பொருளாதார உரிமை

விரும்பிய தொழிலைச் செய்யவும், உணவு உடை இல்லம் போன்றவைகளைப் பூர்த்திசெய்யும் உரிமைகளுடன், சொத்துக்களை சேகரித்தல், வைத்திருத்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வேலைக் கேற்ற ஊதியம் பெறல் போன்ற உரிமைகள் பொருளாதார உரிமைகள் என்ற வகைக்குள் அடங்குகின்றன.

சோஸலிஸவாதிகளும், நாடுகளும் பொருளாதார உரிமை பலவற்றை ஏற்றுக்கொள்வதில்லை என்று சனநாயக வாதிகள் குற்றஞ்சாட்டி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்குகின்றது.

## சூரியக் குடும்பத்தில் மேலும் பல துணைக் கோள்கள்

சூரியனையும் அதனைச்சுற்றிவரும் ஒன்பது கோள்களையும் ஞாயிற்றுத் தொகுதி என்கின்றோம் அவற்றுள் சூரியனிலிருந்து தூரத்தில் மூன்றாவதாக இருப்பது நாம் வாழும் பூமி.

கடந்த ஐந்து வருடகாலமாக ஹவாய் பல்கலைக்கழகத்தில் நட்சத்திரங்களை ஆய்வுசெய்யும் விஞ்ஞானியான டேவிட் ஜேவிட்,ஸ்கெட் ஷெபர்ட் ஆகியோர் 65துணைக் கோள்கள் இருப்பதாக கடந்த மே மாதம் அறிவித்திருந்தனர்.

இதன்படி வியாழனிலுள்ள 16 துணைக்கோள்களைவிட 45துணைக் கோள்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்படி வியாழனுக்கு 61துணைக்கோள் இருக்கின்றன.

இரண்டாவது பெரிய கோளான சனிக்கிரகத்திற்கு 18ல் இருந்து 31 துணைக்கோள்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதன்படி 13 துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூமியைப்போன்று நான்கு மடங்கு பெரிதான யுரேனஸ் பச்சைநிற முகில்க்கூட்டங்களுடன் கூடியது. அதில் பச்சை நிறத்திற்குக் காரணம் வாயு மண்டலத்தின் உட்புறத்தில் காணப்படும் மீதேன்,ஹைட்ரஜன், ஹீலியம் என்ற வாயுக்களே 1999ஆம் ஆண்டில் யுரேனஸ் கிரகத்திற்கு நான்கு புதிய துணைக் கோள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்படி அதற்கான துணைக்கோள்கள் 22-ஆகும்.

நெப்ரியூன் கிரகத்தில் காணப்படும் மீதேன்வாயு காரணமாக அதன்பச்சைநிறம் நீல நிறமாகக் காட்சியளிக்கின்றது. அக்கோளுக்கு 1999ஆம் ஆண்டு எட்டுத்துணைக்கோள்கள் இருப்பது புதிதாகக் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. அது 2003ஆம் ஆண்டில் 11ஆகக் கூடியிருப்பது புதுக் கண்டு பிடிப்பாகும்.



### ஐ.நா. பொதுச்-செயலர்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர்களாக இருந்தோரும் அவர்களது நாடுகளும்.

1946 டிரைக்வே லை-நோர்வே
1953டாக்மார்ஸ்க் ஜோல்டு - சுவீடன்
1961 உதாண்ட் -பர்மா
1972 குர்ட்வால்ட்ஹைம்- ஆஸ்ரியா
1982 பெரஸ்டி-கொயஸ் -பெரு
1992 பூட்ரஸ் காலி- எகிப்து
1997 கோபி அனான்-கானா

## பெர்லின் சுவர் பிளாஸ்ரிக்கில்

46கிலோமீற்றர் நீளம் கொண்ட பெர்லின் சுவர் பிளாஸ்டிக்கில் கட்டப்படுகிறது.

கிழக்கு ஜேர்மனி- மேற்கு ஜேர்மனி இடையே பெர்லின் சுவர் கட்டப்பட்டிருந்தது. 42 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அந்த சுவர் 1991ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன் கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் இணைந்தன. இப்போது, மாதிரி பெர்லின் சுவர் பிளாஸ்டிக்கில் கட்டப்படுகிறது. இது 46 கிலோமீற்றர் நீளம் கொண்டது.

பலூசியஸ் என்பவர் இந்த யோசனையைத் தெரிவித்தார். இப்பணிக்கு உலகம் முழுவதும் இருந்து கலைஞர்கள் அழைக்கப்படுவார்கள்.

2006ஆம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி நடப்பதற்கு முன் பெர்லின் சுவர் தயாராகிவிடும் என்று பலூசியஸ் தெரிவித்தார்.

# பகுதி நேர ஆங்கில ஆசிரியரின் போராட்டம் தொடர்கிறது

(திருகோணமலை)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர் போராட்டம் நேற்று முப்பத்தொராவது நாளாகவும் திருகோணமலையில் அமைந்துள்ள மாகாண கல்வி அமைச்சின் செயலகம் முன்பாக நடைபெற்றுள்ளது.

வட-கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த பகுதி நேர ஆங்கில ஆசிரிய சங்கங்களும் கலந்து கொண்டன.

ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகின்றபோதும் அதற்கான நிரந்தர நியமனம் வழங்கப்படாதுதொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யப்படுவதைக் கண்டித்தும் தமக்கு உடனடியாக நிரந்தர நியமனத்தை வழங்குமாறு இவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இந் நிலையில் தமது போராட்டத்திற்கு சாதகமான முடிவு கிடைக்கும் வரை தாம் போராட்டத்தைத் தொடரப் போவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# படையினரின் வாகனச் சோதனையால் யாழ். பயணிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வாகன பரிசோதனைகளினால் பாடசாலை மாணவர்கள் முதல் அரச உத்தியோகத்தர்கள் வரை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் வாகனங்களை மறித்து வாகனப் பரிசோதனைகயளை மேற்கொள்வதால் பாடசாலைகளுக்குச் செல்லும்மாணவர்கள்தாமதமாகப் பாடசாலைக்குச் செல்கின்றனர். இதேவேளை, அரச உத்தியோகத் தர்களின் வாகனங்களும் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதால் அரச உத்தியோகத்தர்களும் தமது கடமைகளுக்கு தாமதமாகவே செல்கின்றனர். (ஆ)

# நாட்டுப்பற்றாளர் கந்தசாமி இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு

நாட்டுப்பற்றாளர் லோயர் கந்தசாமி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு 28-10-2003 செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணியளவில் கிளி.:.தருமபுரம் ம.வியில் நாட்டுப்பற்றாளர் நினைவு செயற்பாட்டுக் குழுத் தலைவர் ப. கணேசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மாவீரர் கப்டன் அன்பனின் தந்தை கு. ஸ்ரீதரன் அவர்களும், கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிமனை, அலுவலக உதவியாளர் திருமதி இரத்தினேஸ்வரி அவர்களும் ஈகச்சுடரேற்றினர்.

தொடர்ந்து திருவுருவப்படத்திற்கு பொ. இராசமூர்த்தி அவர்கள் மலர் மாலையினை அணிவித்தார். தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. நினைவுரைகளை தருமபுரம் கிழக்கு கிராம அபி விருத்திச் சங்கத் தலைவர் செ. புஸ்பராசா அவர்களும், கிராம அலுவலர் ச. சந்திரன் அவர்களும் மற்றும் சி. கந்தசாமி, தருமபுரம் மகா வித்தியாலய உப அதிபர் செல்வி ந. முருகேசு அவர்களும், விசுவமடுப் பிரசேதப் பொறுப்பாளர் சி. செழியன் அவர்களும், தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் பொ. இளஞ்சேரன் அவர்களும் நிகழ்த்தினர்.

நாட்டுப்பற்றாளர் கந்தசாமி அவர்களின் தேசத்திற்கான உழைப்பையும்அவரதுசமூக சேவையையும் நினைவு கூர்ந்து பின்னர் தருமபுரம் கிராமத்திலிருந்து 2003ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான கிருட்ணசாமி இலட்சுமிகுமாரி அவர்கட்கு நாட்டுப்பற்றாளர் கந்தசாமி நினைவுப் பணப்பரிசினை நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் வழங்கிக் கௌரவித்தார். செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராளிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் பங்குபற்றினர்.


## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள், கணினிப் பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த நிர்வாகிகள், உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 08-11-2003 சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆதவன் கல்வி நிலையத்தில் நடைபெறவிருப்பதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு,**
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

(3141)

## 2ஆம் ஆண்டு நினைவுகள்

மலர்வு: 29-06-1975

உதிர்வு: 01-11-2001



**திருமதி சி. கோமுகி ஜினா**

ஆசிரியை கொக்குளாய் அ.த.க.பாடசாலை

திதி: ஐப்பசி பூரணை 08-11-2003

இவள் விழிமூடி இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
எமக்குள் விழித்துக் கொண்டுள்ளது
இவளது நினைவுகள்

ஜினாவின் நினைவுடன்
பாச உறவுகள்.

பருத்தித்துறை (3124)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி மாவட்டம்

### அழுக்குத்துணி கழுவுதல்

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சிப் பிரிவின் கீழ் உள்ள கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் கழுவுவதற்கான கேள்விகள் 2003–11–27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபை திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 400 /- ஐயும், கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100/- ஐயும் செலுத்தி 2003–11–26 ஆம் திகதி புதன்கிழமை 16.00 மணி வரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய நிறுவனங்கள்:**

01] மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி
02] சுற்றயல் கூறு, அக்கராயன்.
03] சுற்றயல் கூறு, பூநகரி.
04] சுற்றயல் கூறு, பளை.
05] ம.ம.ம. மனை, தர்மபுரம்.
06] ம.ம.ம. மனை, வட்டக்கச்சி.
07] ம.ம.ம. மனை, வேரவில்.
08] ம.ம.ம. மனை, உருத்திரபுரம்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப் பிரதி தனியாகவும், இணைப் பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மேலதிக விபரங்கள் இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ள முடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

**வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி,**
**மா. சு. சே. பி. பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(சி.-8687)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை — கிளிநொச்சி

### பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல் – 2004

2004ஆம் ஆண்டு மா. சு. சே. பி. பணிப்பாளர் கிளிநொச்சி பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 2003-11-27ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புவோர் தமது பெறுமதி சான்றிதழும் ( Worth report ) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும் ( Bid Bond ) சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100ம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணமும் செலுத்தி 2003-11-26ஆம் திகதி புதன்கிழமை 10.00 மணி வரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்கள் பின்வருமாறு:

*அ. உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலை*

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி | பெறுமதி சான்றிதழ் |
|---|---|---|---|
| மா.வை. கிளிநொச்சி | 2000/- | 50,000/- | 20,000/- |

*ஆ. சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்*

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி | பெறுமதி சான்றிதழ் |
|---|---|---|---|
| சு.கூறு அக்கராயன் | 1500/- | 40,000/- | 15,000/- |
| சு.கூறு பூநகரி | 1500/- | 40,000/- | 15,000/- |
| சு.கூறு பளை | 1500/- | 30,000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை தர்மபுரம் | 1000/- | 25,000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை வட்டக்கச்சி | 1000/- | 20,000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை வேரவில் | 1000/- | 20,000/- | 15,000/- |
| ம.ம.ம. மனை உருத்திரபுரம் | 1000/- | 20,000/- | 15,000/- |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப் பிரதி தனியாகவும், இணைப் பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களை இப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ள முடியும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

**வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி.**
**மாகாண சுகாதார சேவைகள்,**
**பிரதிப் பணிப்பாளர், கிளிநொச்சி.**

(சி-8686)

# "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"

"காந்தரூபன்" என்கிற சொல் இன்றுதமிழரின் போராட்ட வாழ்வியல் அகராதியிலே இடம்பெற்றதொரு சொல்லாகிவிட்டது. ஏனெனில், காந்தரூபனின் சொற்களில் வாழ்வொன்று எம் மண்ணில் விரிந்தது. அந்தச் சொற்களை நாம் என்றும் நினைவிற் கொள்ளல் நலம். 'உங்களுக்குத் தெரியும் அண்ணை நானொரு 'அனாதை'. அப்பா, அம்மா இல்லாம.... ஆருமே இல்லாம... அலைஞ்ச என்னை ஒரு அப்பாவும் அம்மாவும் எடுத்துத் தங்கட பிள்ளையைப்போல வளர்த்தினம்... அதுக்குப் பிறகு நான் இயக்கத்திற்கு வந்தன். நீங்கள் என்னை அன்போடையும், பாசத்தோடையும் ஆதரிச்சு வளர்த்தியள். நான் வருத்தங்களால் வாடேக்கை எனக்கு வேண்டிய எல்லாத்தையுஞ் செய்து கவனிச்சியள்... இப்ப நான் ஒண்டு உங்களிட்டைக் கேட்கப்போறன். அண்ணை... தயவு செய்து எனக்காக அதை நீங்கள் செய்ய வேணும். என்னைப் போல் எத்தனையோ பொடியள் இந்த நாட்டிலை அனாதைகளாக வாழுறார்கள்... அப்பா, அம்மா இல்லாமச் சொந்தரக்காரர் இல்லாம அலைஞ்சு திரியறாங்கள்... வாழ இடமில்லாம... படிக்க வசதியில்லாம... எவ்வளவோ ஏக்கங்களோடையும், துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் என்றதை நான் அனுபவத்தில் கண்டனான். அண்ணை... நீங்கள் என்னை அன்போடை கவனிச்சுப் பார்த்ததைப்போல அவர்களையும் கவனிக்க வேணும். அவர்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதி செய்து கொடுங்கோ. அவங்களுக்குக் கெண்டு ஒரு இடத்தை அமைச்சு அங்க வைச்சு அவர்களையெல்லாம் வளர்த்தெடுத்து அவர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்துவிடுங்கோ அண்ணை" (1988, 1989 களில் காந்தரூபன் தலைவர் அருகில் மணலாற்றுக் காட்டில் நின்றிருந்தவேளை ஒரு நாள் தன்னைக் கரும்புலியாக சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டிய பின் தலைவருக்குத் தனது வேண்டுகையை அவர் முன் இவ்வாறு வைத்தார்.)

காந்தரூபன் என்கிற அப்போராளியின் மனத்தினடியிலிருந்த ஏக்கம் வெளிவந்த விதம் எத்தனை பரந்த சிந்தனையின் அடிப்படையிலானது? சிறுவயதில் அவன் பட்ட துயரின் ஆழம் எத்தகையது? தானொருவன் பட்ட துயரை எவ்வளவு அர்த்தப் பரிமாணம் கொண்ட வேண்டுகையாக அவன்மாற்றினான்? தன்னுயிர்போல் மன்னுயிரை நேசிக்கும் அவ் விளமனத்தின் முதிர்ச்சி... என் மனத்தின் சிந்தனைக் குருவி சிறகடித்தது. "என்னைப்போல எத்தனை பொடியள்... எவ்வளவு ஏக்கங்களோடை... எவ்வளவு துன்பங்களோடை... நான் அனுபவத்தில் கண்டனான்". இச்சொற்கள் என் மனத்தை வாட்டியும் பிசைந்தன. அன்று இச் சொற்கள் எத்துணைத் தாக்கத்தினைத் தலைவர் மனத்தில் ஏற்படுத்தியிருக்க முடியும்? என்னால் உணர முடிந்தது... ஊகிக்க முடிந்தது. ஏனெனில், அவன் சொல்லில் விரிந்த வாழ்வு இதோ என் முன்னால் தோற்றம் காட்டுகின்றது. (கலகலவென்று சிரித்து விளையாடும் சிறார், விடலைப்பருவத்தினர் மத்தியில் காந்த ரூபன் அறிவுச் சோலையின் பரந்த மைதா னத்தில்

## க. வே. பாலகுமாரன்

நான் நிற்கின்றேன். மாலை நேரம் இடைவிட்டு அடர்ந்து நிற்கும் மரங்கள் எல்லையாக அவற்றிலிருந்து சிறகடிக்கும் பறவைகள் நட்பொலி இசையாக நான் மீண்டும் உயிர்க்கின்றேன்)

இப்போது என் அறிவு மனம் விரிந்தது. என் முன்னாற் பல அறிக்கைகள் அவற்றின் புள்ளி விபரங்கள் இரைந்து கிடக்கின்றன. உலகின் இன்று முதன்மைக் கவனத்தினைப் பெற்றிருக்கும் சிறுவர் நலன் பற்றியவையே. அத்தனையும் எத்தனைவகையிற் பாதிக்கப்பட்ட சிறார்கள் பட்டியல்? போரினால் பாதிப்புற்றோர், வறுமை காரணமாக கைவிடப்பட்டோர், உடல் ஊனம், புலன்கள் அற்றதாய் வீதிக்கு வந்தவர், குழந்தைத் தொழிலாளர், போதைப் பொருள் விற்போர், சிறுவர் பாலியல் விவகாரம், வீதியிலே வாழும் வகையினர், வயிற்றினைப் பிசையும் புள்ளி விபரங்கள். உலகம் இத்தனை துயரம் அல்லது கொடுமை நிறைந்ததா? "கடந்த பத்தாண்டுகளிற் போர் காரணமாக ஒன்றரை மில்லியன் பிள்ளைகள் இவற்றில் உள்ளனர். நான்கு மில்லியனுக்கு மேற்பட்டோர் உடல் ஊனமுற்றவர்களாக மாறினர். ஐந்து மில்லியனுக்கு மேற்பட்டோர் எதிரிகள் தாக்கங்களில், இன்னொரு பன்னிரண்டு மில்லியனுக்கு மேற்பட்டோர் தங்க இடமின்றித் தவிக்கின்றனர். சிறிலங்காவின் சேரிற் சிறார் பற்றிப் பேச புள்ளி விபரங்கள், எமது தாயகப் பகுதியின் புள்ளி விபரங்கள், மனத்தை மருட்டும் புள்ளி விபரங்கள். பிள்ளைப் பருவமானது மானிட வாழ்வின் முக்கிய கட்டம். எனவே, அப்பிள்ளை அப்பருவத்தில் தான் அனுபவிக்க உருத்துடைய அனைத்து உரிமைகளையும் பெற்றிருக்கின்றது. வளர்ந்தோர், பிள்ளைகள் மீது நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் பல உண்டு. 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தைப் பிள்ளைகள் உரிமை தொடர்பான ஐ. நா.வின் ஒப்பந்தம், வாழும் உரிமை, அபிவிருத்தி உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்ற உரிமை என பிள்ளைகளின் உரிமைகளை வகுத்துள்ளது. இப்போது காந்தரூபனின் கோரிக்கையின் அறிவுப் பரிமாணம் எனக்குத் துலாபாரமாகியது. வீதியில் வாழும் சிறுவர் எனப் புதியதொரு சமூகத் தொகுதியே இன்று அடையாளம் காணப்பட்டுவிட்டது. எமது மண்ணில் இந்நிலை தோன்றினால்? நினைக்கவே நெஞ்சு கனத்தது. காந்தரூபன் பற்றிய அபிமானம் பேரபிமானமானது.

"சிறுவர் உள வளர்ச்சிப் படிகளிற் பத்து வயது உட்பட நான்கு வளர்ச்சிப் படிகள் மிக முக்கியமானவை. முதல் வருடத்தினைக் கொண்ட குழந்தைக்கும் தங்களுக்குமிடையிலான தொடர்பினை முதன்மையாகக் கொண்டது. குழந்தை முற்றிலுமாக பிறரில் தங்கியிருக்கும். இந்நிலையில் அதன் இயல்பூக்கச் செயற்பாடுகளுக்குத் தக்க பரிகாரம் செய்யப்படாதவிடத்து அதன் மனத்தில் ஆழவடு தோன்றுகின்றது. எனவே, நம்புதல் - நம்பிக்கையின்மை இரு நிலைகளில் ஒன்றைக் குழந்தை தெரிவு செய்ய நேரிடுகின்றது. நான்காம் படியானது ஐந்து முதல் பத்து அகவை வரையிலானது. இக்கட்ட வளர்ச்சிப்பாடு மிக முக்கியமானது. வாழ்வின் செயலூக்கமும் தேடலின் ஆர்வமும் அறிவின் வளர்ச்சியும் இக்கட்டத்தில்தான் தோன்றுகின்றன. இந் நிலைமையிற் பிள்ளையின் சூழல் உறுதிப்பாடானதாக, பாதுகாப்பானதாக, அத்திவாரமாக அமைய வேண்டும். இவை பாதிக்கப்பட்டால்? பிள்ளை மீண்டும் செயலூக்க நிலை - செயலூக்கமற்ற நிலை என இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்ய நேரிடுகின்றது". இவ்வாறாக விரியும் அறிவார்ந்த ஆய்வாளர் வரிகளெல்லாம். "நான் அனுபவத்தில் கண்டனான் அண்ணை. அவர்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதி செய்து குடுத்து அவர்களுக்கென்று ஒரு இடத்தை அமைச்சு, அங்க வைச்சு அவர்களையெல்லாம் வளர்த்தெடுத்து... அவங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தினை குடுங்கோ அண்ணை... குடுங்கோ அண்ணை... குடுங்கோ அண்ணை..." இச்சொல் எங்கும் எதிரொலித்தது.

இக்கட்டத்தில் இன்னொரு குரல் கவிப்பிரியாவின் குரல் (மாணவி - பூநகரி அ.த.க. பாடசாலை)

"...காலையும் விடிந்துமென்ன, கதிரவன் உதித்துமென்ன,
சத்தியங்கள் இருந்துமென்ன, சரித்திரங்கள் படைத்துமென்ன,
கல்லூரிகள் இருந்துமென்ன, கற்போர்கள் நிறைந்துமென்ன,
நேசங்கள் அந்த வாழ்வில் நிம்மதி ஏது அம்மா?
போராட்ட வாழ்வினோடு புண்பட்டு நொந்து போனோம்.
பலநூறு தொல்லைகளால் பாலகர்கள் நாம் நொந்து போனோம்."

காந்தரூபனின் குரலல்லவா இது. கனத்த மனத்துடன் காந்தரூபன் அறிவுச்சோலை சென்றேன். பிரதான வீதிக்குச் சற்றே தள்ளி, வீதிப்போக்குவரத்து ஒலி மறைய காட்டு மரங்கள் தென்பட ஆங்காங்கே எளிமையான கொட்டில்களில், எளிமையான மனிதர்கள் வாழ காந்தரூபன் அறிவுச்சோலை என்னை வரவேற்றது. மாலை நேரமாகையாற் கலகலவென்று பிள்ளைகளின் சிரிப்பொலி, கரகரவென்று கேட்கும் விடலைப் பருவத்தினருள் கனத்த ஒலி அவரவர் தம்பாட்டில் ஓடியாடி... உறுதியான, பாதுகாப்பான சூழலில் அல்லவா இவ்வாறான தோற்றத்தினைக் காணமுடியும்? சட்டென்று புத்தியில் உறைத்தது. இது எவ்வளவொரு பாரிய பணி? தலைவர் தன் தோள்மேல் தானாகவே ஏற்ற பணி; எவராலும் அசைக்க முடியாத தலைவர் நெகிழ்ந்த விதம்; பிள்ளைகள் துயர் உணர்ந்து தலைகுனிந்த தோற்றம்; பாறைக்கடியில் ஓடும் கனிவாற்றின் தன்மை; எல்லா வெப்பமும் தணிந்த குளிர்மை இப்பிள்ளைகளின் மனநிலை உணர்ந்து அவர் முகத்தில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்க எத்தனை சிரமம்பட்டிருக்க வேண்டும்? பொறுப்பாளருடன் அருகமர்ந்து பேசினேன். அருகில் புறாக்கள் தாவித் தாவிப் படபடத்தன. புறாக்களின் அடைக்கலமா? இரைதேடி வெளிச் சென்ற பின் அங்கேயே தங்க அவை வந்துவிடும் என்றார்கள்.

10.07.1990 அன்று "எடித்தாரா" கட்டளைக் கப்பல் மீதான தாக்குதலிற் கடற்கரும்புலியாகிவிட்ட மேஜர் காந்தரூபன் (அவருடன் கூடவே கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத்) காந்தரூபன் கடலன்னையின் மடியில் வித்தாகினான். தலைவர் மனத்திலோ அவன் விதைத்த வித்துத் தளிர்த்துவிட்டது. வெளியுலகு அறிந்திருக்காத வேளையில் 1993ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 01ஆம் நாளன்று கோப்பாயில் மாமரச்சோலை நடுவே அறிவுச் சோலை உதயமாகின்றது. காந்தரூபன் (அங்கு இணைக்கப்பட்ட பலவாறாக திரட்டப்பட்ட ஐம்பதிற்குட்பட்ட பிள்ளைகளில்) மீண்டும் பிறப்பெடுத்தான். அனேகமாக இவர்கள் பத்து வயதிற்குட்பட்டவர்கள். தமிழ்ச் சமூகத்தின் மீதான முதற்சமூக அளவிலான அதிர்ச்சி வைத்தியம் இதுவென நான் எண்ணிக் கொண்டேன். பல இடங்களுக்குப் பல காலமாக இடம்பெயர்ந்து தற்போதைய இடத்தில் 1998ஆம் ஆண்டிலிருந்து இயங்கும் நிலை வாய்த்தது. ஏறத்தாழ 220 பேர் வரை இருக்கின்றனர். பத்து வயதிற்குட்பட்டோர் 60 பேர் வரையிருக்கும். ஆறு மாதத்திலொரு குழந்தை. ஒரு வயதில் இன்னொரு குழந்தை,



காந்தரூபன் [illegible] சோலை [illegible] தேசியத் தலைவர்

அவனைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டேன். கொழுகொம்பைச் சுற்றிப் படரும் கொடிபோல என்மேல் படர்ந்தான் குயிலன். அருகில் நின்ற அம்மா முகத்திற் பெருமிதம்: அவர் வளர்த்த பிள்ளையல்லவா? பிள்ளைகள் பெற்ற எல்லாத் தாய்மார் முகத்திலும் இப் பெருமிதத்தினை நான் பார்த்திருக்கின்றேன்.

இப்போது மீண்டும் என் அறிவுமனம் விழித்துக் கொண்டது. எவ்வாறு இயங்குகின்றது இவ்வறிவுச்சோலை? தொடக்கத்திலேயே [illegible] இணைந்தோர் என்ன செய்கின்றார்கள்? வளர்ந்தவர்கள் எதிர்காலம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது? பல கேள்விகள் எழுகின்றன. சமூகத்தில் இவர்கள் இடமென்ன, சமூகத்திலிருந்து பிரிந்து வாழ்வதன் ஆபத்து? உறவுகளைத் தேடும் மனங்கள்? வளரும் பிள்ளைகள் மனதின் அடியாழங்களிலே தோன்றும் எண்ணக் கிளர்ச்சிகள்? எவ்வாறு இவை எல்லாம் கையாளப்படுகின்றன? அதேவேளை, எத்தகைய பொறுமையுடனும் உளவியல் முதிர்ச்சியுடன் இம்மனங்கள் கையாளப்பட வேண்டும். எதிர்வினைகாட்டவும் அதிலும் திருப்தியைக் காண முடியாத ஒரு முரண் மன நிலையும் ஒரு சில பிள்ளைகளிடமாவது இருக்குமல்லவா? கிடைத்த விடைகள், தகவல் தோற்றப்பாடுகள் இவையாவற்றினையும் தொகுத்தபோது அறிவுச்சோலை பக்குவமாக அறிவியல் முறைப்பட பேணப்படும் ஒரு நாற்றுப் பண்ணையாக உருவகம் செய்யத் தோன்றியது.

அறிவுச் சோலை பிறந்தபோதே இணைந்தோரிற் பலர் இன்னமும் அங்கேயே இருக்கின்றார்கள். உறுதியான, ஆரோக்கியமான உடற்கட்டமைப்போடு வளர்ந்த தோற்றத்தோடு வளரிளம் பருவத்தின் விடலைப் பருவம் தாண்டும் அவர்களைக் கண்டு வியந்து கொண்டேன். "பால் நினைந்தூட்டும் தாயினும் சால்" என்கிற திருவாசக அடிகள்நினைவுக்கு வந்தன. அங்குள்ளோரின் நாளாந்தச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இயங்குபவர் அங்குள்ளோரின் ஒருவரே என அறிந்ததும் மகிழ்ந்தேன். காந்தரூபனின் உடன்பிறப்புக்கள் பதினெட்டு அகவையை அடைந்ததும் தமது எதிர்காலம் குறித்து முடிவெடுக்கும் பொறுப்பினை அவர்களிடமே விட்டுவிடுகின்றோம் என்றார் புவியரசன். ஏறத்தாழ ஐம்பது பேர் வரை அவரவர் உறவுகளிடம் அவரவர் விருப்பப்படி ஒப்படைத்துள்ளோம். அவ்வாறு ஒப்படைக்கும்பொழுது உறவுகளின் உண்மை நிலைகளைச் சரிவர அறிந்து தாய் வசமே இவர்களை கையளித்து வருகின்றோம் என்றார் அவர். தொடர்ந்து உயர் கல்வி கற்கும் சிலர் பற்றியும் அறிந்தேன். தன்னம்பிக்கையுடன் சமூகத்திற் கால்பதிப்போருக்கு உதாரணமாக சகோதரியை அம்மம்மாவைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களை தன் கூடவே வீடொன்று அமைத்து பணியொன்று தேடி வைத்திருப்பதன் மூலம் குடும்பவேரினை ஊன்றிய ஒருவர் கதை கேட்டேன். சிதறிக்கிடந்த நல்வித்துக்களைத் தேடியெடுத்து நீரூற்றி வளர்த்து சமூகமாகிய பெருவனத்தினுள்ளே மரத்தோடு மரமாக அவர்கள் இணையும் செயல்முறை உருவாக்குவது கண்டு தமிழ்ச் சமூகம் நிச்சயம் திருப்தி கொள்ளும் என நம்பினேன்.

அறிவுச்சோலையில் நான் நின்றபோது ஒரு சீரான கதியில் இயங்கும் ஒரு அசைவியக்கத்தினை உணர்ந்தேன். ஒரு தொடர் வண்டித் தொடர் போல் அது நகர்ந்த வண்ணமேயிருந்தது. தாளம் தப்பாத வகையில் அதிகாலை ஐந்து மணிக்குத் துயில் விட்டெழும்பி காலைக்கடன் முடித்து முற்றத்தில் ஒன்று கூடி நற்சிந்தனை கேட்டு தமிழீழத்தின் சிறந்த நற்குடிகளாவோம் என உறுதியுரை எடுத்துப் பாடசாலை சென்று பின் வந்து மாலை முழுவதும் விளையாடப் பின் கற்றல் கூடம் சென்று பாரதியின் பாப்பா பாட்டில் வரும் "வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா" என்கிற வரிகள் நினைவிற்கு வந்தன. இவர்கள் செல்லும் பாடசாலை நகரின் மையத்திலிருக்கும் எல்லாப் பிள்ளைகளும் படிக்குமொரு பாடசாலை. சமூகத்தில் இணையமுதல் இணைப்புச் சங்கிலியிது. முதலிற் பாடசாலைச் சமூகம்கண்டு அதிர்வடைந்ததும் எதிர்வினை காட்டியதும் விலகி முரண்பட்டாலும் பின்னர் இயல்பு நிலையடைந்து... வெட்கப்பட்டதும் கேட்பதற்கு ஆனந்தமாகவிருந்தது.

வயது ரீதியாக வகுக்கப்பட்டு, வகுப்பு ரீதியாகப் பிரிக்கப்பட்டு எளிமையான, துப்பரவான விடுதிகளில் [illegible] சமூகமாகவே இவர்கள் வாழ்கின்றார்கள். இன்றும் நேர்த்தியாகச் சீராக ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் அரங்கம், கற்றற்கூடம், மைதானம், விடுதிகள், குளிக்குமிடங்கள், கழிப்பறைகள், சமையற்கூடங்கள், உணவருந்தும் விடுதிகள், நூலகம், மனமகிழ் மன்றம் அமைப்பதற்கான தலைவரின் அடுத்தகட்டச் செயற்பாட்டின் ஆர்வம் பொறுப்பாளர் சொற்களில் வெளிவந்தது.

இப்போது நான் பிரியும் நேரம் இளையோர் கற்றற்கூடம் செல்லும் மாலை முடியும் நேரம். புத்தகப்பைகளுடன் சீருடையல்லாத தளர்வான உடைகளிலிருந்து அணிவரிசையென்று இல்லாமல் ஒழுங்காக ஒருவர் பின் ஒருவராகச் செல்லும் அவர்கள் என்னைக் கண்டதும் கைகூப்பி 'வணக்கம் மாமா' எனச் சொல்லிச் சென்றபோது மனம் நீண்ட பெருமூச்செறிந்தது. என் முகமே மலர்ந்து. கண்களில் ஒளி வெட்டியது. கட்டுப்பாடற்ற ஒரு கட்டுப்பாடு, கண்டிப்பற்ற ஒரு கண்டிப்பு, பிள்ளைகள் மனம் அலைபாயாமல் தடுக்கும் நல் வழிமுறை. ஆகவும் கடுமையான இலக்குகளைத் திணிக்காது,சமூகத்திலிருந்து அந்நியப்படாது, சமூகத்தினை பழிவாங்கும் மனநிலை வராது, பிள்ளைகளை இயல்பாக வளர்த்திட எடுக்கப்படும் முயற்சிகள் காந்தரூபனின் சொற்களில் விரிந்த வாழ்வு மட்டுமல்ல, அவன் கனவின் நனவும்கூட. இதுவே நான் உணர்ந்த செய்தி.

"ஒளி நமக்கு வேண்டும்" "ஒளியை நோக்கி" "வாழ நினைத்தால் வாழலாம்" "வாழ்ந்தே தீருவோம்" "வாழ்வு நம் பக்கம்" "நாளை உனது நாள்" "தாயுமானவன்" இவ்வாறான நம்பிக்கையின் உருவங்களான சொற்கள் எனக்குப் பிடித்தவை. இப்போது இச்சொற்களோடு இன்னொன்றும் சேர்த்து கொண்டது.

"வாழ்வு கொடுங்கோ அண்ணை" என்பதே அது.

நன்றி:

01) விடுதலைப்புலிகள் ஏடு,

02) யுத்த நெருக்கடியும் சிறுவர் உளவியலும் - கொ. நொ. கொன்ஸ்ரன்ரைன்

03) பிள்ளைகளின் உரிமைகள், சட்டங்கள் - சமரசிங்க குணசேகர.

# மூதூர் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு பாதுகாப்பு வழங்க பொலிசார் மறுப்பு

## வைத்தியசாலை அதிகாரி கவலை

(திருகோணமலை)

**பாதுகாப்பு நிலைமை காரணமாக மூதூர் ஆதாரவைத்திய சாலை நோயாளிகளை வேறு இடங்களுக்கு இடம்மாற்றுவது சிக்கலான விடயமாகவுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.**

ஒரு அம்புலன்ஸ் மட்டுமே வைத்தியசாலையில் உள்ளதாகவும் பாதுகாப்பு தரும்படி பொலிசை நாடிய போது அதற்கு உத்தரவாதம் அளிக்க முடியா தெனவும் பொலிஸ் கூறிய தாகப் பேச்சாளர் தெரிவித்தார்.

திரு கோணமலைக்கு கொண்டு செல்லப்பட்ட கர்ப்பவதிகள் இரு தடவை பட்டித்திடலில் வைத்து தாக்கப்பட்டதாகப் பேச்சாளர் தெரிவித்தார். 18 தாதிமார் வேலை செய்யும் இடத்தில் 5தாதிமார் வேலை செய்வதாக வும் அடிக்கடி ஏற்படும் மின் வெட்டுக் காரணமாக நோயாளிகள் சிரமமடைவதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# பெண் மரணம்

(மல்லாவி)

காய்ச்சல் காரணமாக மலேரியா மாத்திரையை உட்கொண்டவர் கடந்த புதன்கிழமை மரணமடைந்துள்ளார். மல்லாவிப் பிரதேசத்தில் 3ஆம் யூனிற் பகுதியில் வசித்துவரும் தாகூர்நாதன் யோகேஸ்வரி (வயது-32) என்னும் ஐந்து பிள்ளைகளின் தாயே மரணமானவராவார். (24)

# வவுனியா நகருக்குச் சென்ற வயோதிபரைக் காணவில்லை

(செட்டிக்குளம்)

ஒருவாரத்திற்கு மேலாக வயோதிபர் ஒருவரைக் காணவில்லை என்று வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி வவுனியா அவுசதப்பிட்டி என்ற இடத்தினைச் சேர்ந்த 75 வயதான நாரங்வெள கேரத் கெதர பிரேமதாஸ என்ற வயோதிபர் தனது வீட்டில் இருந்து வவுனியா வந்ததாகவும் வவுனியா நகர்ப் பகுதியில் வைத்து சிலர் இவரை கண்டும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவர் அன்று முதல் காணாமல் போயுள்ளதாக இவரின் உறவினர்கள் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (21)

# வவுனியா, யாழ்,மன்னார், கிளி,முல்லையைச் சேர்ந்த 3627 பேர் சிதம்பரபுரம் அகதிமுகாமில் தங்கியிருப்பு

(செட்டிக்குளம்)

வவுனியா-சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தின் 935 குடும்பங்களினைச் சேர்ந்த 3627 மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர் என்று சிதம்பரபுர முகாம் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

1)வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்த-145-குடும்பங்களின்-458பேர்

2)யாழ் மாவட்டத்தினைச் சேர்ந்த-178-குடும்பங்களின்- 679பேர்

3)மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த-31-குடும்பங்களின்-98பேர்

4)கிளிநொச்சி மாவட்டத்தினைச் சேர்ந்த-329-குடுமபங்களின்-1347பேர்

5)முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த-247-குடும்பங்களின்1018பேர்

ஏனைய மாவட்டத்தினைச் சேர்ந்த-05குடும்பங்களின்-27பேர்

மொத்தம் 935 குடும்பங்களின் 3627பேர்

தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்று சிதம்பரபுர நலன்புரி நிலைய புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

இதே வேளை1990ம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து, இந்தியாவின் அகதிமுகாம்களில் வாழ்ந்த 238 குடும்பங்களைச் சேர்ந்த 920 பேர் இதுவரை வவுனியாவுக்கு வந்துள்ளனர் என்று வவுனியா அரச அதிபர் k.கணேஷ் தெரிவித்தார். இவர்கள் தற்போது சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். இவர்களில் 444 ஆண்களும் 476 பெண்களும் அடங்குவர்.

இவர்களில் வவுனியாவினைச் சேர்ந்த 8 குடும்பங்களும்,யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 52 குடும்பங்களும், மன்னாரினைச் சேர்ந்த 11 குடும்பங்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த 11 குடும்பங்களும்,முல்லைத்தீவினைச் சேர்ந்த 56 குடும்பங்களும் அடங்குகின்றன.

# தமது சொந்த இடங்களில் மக்கள் மீளக் குடியமர வேண்டும்

## வவுனியா அரச அதிபர்

(செட்டிக்குளம்)

மக்கள் தமது சொந்த இடத்தில் மீளக் குடியமர வேண்டும். அப்போது தான் அந்த மீள் குடி யேற்றம் சிறப்பானதாக அமையும். இவ்வாறு வவுனியா அரச அதிபர் K. கணேஷ் இன்று வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

மீள் குடியேற்றம் என்ற பெயரில் எல்லா இடங்களிலும் காடுகளினை யழித்து மீளக் குடியமர்துவதன் காரணமாக அது மீள் குடியேற்றம் என்று கூற முடியாது.

எனவே அனைவரும் நன்கு உணர்ந்து அவர்களின் சொந்த கிராமங்களில் சுதந்திரமாக வாழ்ந்தாலே அந்த மீள் குடியேற்றம் சிறப்பாக அமையும் என்று அவர் கூறினார். (21)

# கலைக்கூடலை குழப்ப முயன்றோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

கொழும்பு புதிய நகர மண்டபத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ்-சிங்கள கலைக்கூடலில் பிரச்சினைகளை தோற்றுவித்த அனைவருக்கும் எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் கூறுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.சிஹல உறுமயவும் மற்றுமொரு அரசியல் கட்சியும் ஒரு சில ஊடகவியலாளர்களும் கலவரங்களின் பின்னணியில் இருந்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று அவர் சொன்னார்.

புகைப்படங்களை ஆராயும் போது இந்த விடயம் வெளிப்படையாகத் தெரிகிறதென கொழும்பில் நடந்த செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் நிலவும் அமைதி சூழ்நிலை சீர்குலைய எடுத்த முயற்சி என அமைச்சர் வர்ணித்தார். இத்தகைய நிகழ்வுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு ஆனால் அதனை வெளிப்படுத்துவதில் சரியான முறையில் அனுசரிக்க வேண்டுமெனவும் அவர் சொன்னார்.

# தமிழ்-சிங்கள கலைக்கூடலை குழப்பமுற்பட்ட சிஹல உறுமய மீது பல அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு நகர மண்டப திடலில் நடந்த தமிழ்- சிங்கள கலைக்கூடலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை பல அமைப்புக்கள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன.

இந்தத் தாக்குதல்களைக் கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட முடியும் என ஊடக இயக்கம் தெரிவித்திருக்கிறது.

தாக்குதல் குறித்து ஒரு சில ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்கள் கருத்து சுதந்திரத்திற்கும் கூட்டம் கூட்டும் உரிமைக்கும் விடுக்கப்பட்ட பலமான அச்சுறுத்தல் என அந்த அமைப்பு கூறுகிறது.

இன ஐக்கியம், புரிந்துணர்வு என்பவற்றை வளர்க்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு கடும்போக்கு சக்திகள் இத்தகைய வன்முறைகளின் மூலம் தடைகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. பல தடவைகள் இது போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன எனவும் சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக் காட்டியிருக் கிறது.

சமாதானத்துக்கான தேசிய கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் சிஹலஉறுமய அழைத்து வந்த குண்டர்கள் இந்தத் தாக்குதல்களை நடாத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தமிழ்- சிங்கள கலைஞர்களின் கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் சிக்கலை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதுபோன்ற இனவாத சக்திகளை சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களும் கண்டிக்க வேண்டுமென அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.


இதேவேளை, இது தொடர்பாக கைது செய்யப்பட்ட தமது கட்சியின் அங்கத்தவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு சிஹலஉறுமய உறுப்பினர்கள் கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

# ஒரு கொடியில் பூத்த இரு மலர்களின் நினைவில்...

## 3ஆம் ஆண்டில்... 8ஆம் ஆண்டில்...

பரிசோதகர்
தமிழீழ காவல்துறை
**செல்வம் யோகராசா**

தோற்றம் 02-09-1969
மறைவு 11-11-2000



வீரவேங்கை
**தீபா**
(செல்வம் ஜெயரதி)

தோற்றம் 08-03-1975
வீரச்சாவு 17-10-1995

வீரமைந்தரே

அன்பு நிறைந்த மொழியாலும் பண்புமிகு செயலாலும்
ஊரிலே நீவீர் உயர்ந்து நின்ற கதை மறவோம்
பாச உறவு அறுத்து தேச வீடுதலைக்காய்
அண்ணனும் தங்கையுமாய்
தானைத் தலைவன் கீழ் வீர வீழுதெறிய

ஆர்வமுடன் விரைந்தவரே
எதிரியவன் சிரங்கொய்த்து ஏற்றமுடன்
மண்ணை முத்தமிட்ட மாதவ மைந்தரே
உங்கள் கனவுகள் நனவாகும்.
கற்பனை காவியமாகும்.
ஈழம் விரைவினில் மலரும் – அன்று
விடிவெள்ளியில் தெரியும் உங்கள் முகம்.

01-01-2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டு நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு காவல்துறையினர், போராளிகள், உறவினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

த.முகவரி:
மந்துவில்,
புதுக்குடியிருப்பு (3132)

**குடும்பத்தினர்.**

# பிந்துனுவெவ தமிழ் இளைஞர் படுகொலை வழக்கு

# மரண தண்டனைக் கைதிகளின் மேன் முறையீடு இன்று விசாரணைக்கு வருகிறது

(கொழும்பு)

பண்டாரவளை-பிந்துனுவெவ தமிழ் இளைஞர்களின் கொலை குற்றச்சாட்டின் பேரில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்த மேன் முறையீடு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியாளர் சரத் என் சில்வா தலைமையிலான ஐவர் அடங்கிய நீதியரசர்களின் முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

இந்த விசாரணைக்கென மனுதாரர்களால் 50 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கொலை வழக்கு சம்பவத்தில் பிந்துனுவெவ காவல் நிலைய அதிகாரிகள் இருவர் மற்றும் கிராம வாசிகள் மூவர் மற்றும் ஒருவர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை தீர்ப்பளித்துள்ளது.

# உதவிச் செயலாளர்களை நியமிக்க முடிவு

அமைச்சுக்களுக்கு உதவி செயலர்களை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி அமைச்சுக்களின் செயலர்கள்,நிதியமைச்சும் முகாமைப் பொறுப்புக்களில் இருந்து விடுவிக் கப்பட்டு அந்த பொறுப்புக்கள் புதிதாக ஏற்படுத்தப்படும் அமைச் சுக்களின் உதவி செயலர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின்படி உள்துறை பாதுகாப்பு, சுகாதாரம் உட்பட 8 அமைச் சுக்களுக்கு ஆரம்பமாக உதவி செயலர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (32)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத் தையே சிறுபான்மையினர் மீது திணி த்து வந்திருக்கிறது.

தமிழீழ.ந்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-11-2003

# ஜே.வி.பி.க்காக

கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் அவர்களை சனாதிபதி சந்திரிகா கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவியிலிருந்து வெளியேற்றக் கோரியமை தொடர்பாக. - ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். சனாதிபதி சந்திரிகா தற்பொழுது தான் உண்மை நிலைமையைப் புரிந்து கொண்டிருப்பதாகவும், கண்காணிப்புக் குழுத் தலைவரை மட்டுமல்ல, கண்காணிப்புக் குழுவினர் அனைவரையுமே சனாதிபதி வெளியேற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்காணிப்புக் குழுத் தலைவரை சனாதிபதி வெளியேற்றியமை குறித்து விமல் வீரவன்ச மகிழ்ச்சி தெரிவித்துள்ளமை ஒன்றும் எதிர்பார்க்க முடியாததல்ல. யுத்த நிறுத்தமே தேவையற்றது எனக் கூறும் ஜே.வி.பி.யினருக்கு கண்காணிப்புக்குழுத் தலைவரை வெளியேறுமாறு சனாதிபதி பணித்தமையானது மகிழ்ச்சி அளிக்காது வேறு எவ்வாறு இருக்க முடியும். ஆனால், தற்பொழுது உள்ள முக்கியமான கேள்வி சனாதிபதி கண்காணிப்புக் குழுத் தலைவரை வெளியேற்றப் பணித்தமையானது, அவரின் தனிப்பட்ட விருப்பின் பாற்பட்டதா? அன்றி ஜே.வி.பி.யின் விருப்பின் பாற்பட்டதா என்பதே ஆகும்.

ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ.முன்னணியுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடாத்தியிருப்பினும், அதில் இணக்கப்பாடு / முன்னேற்றம் காணப்படாமைக்குக் காரணம் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இரு தரப்பினரும் கொண்டிருந்த நிலைப் பாடே ஆகும். அதிலும் குறிப்பாக, நோர்வேயின் பங்கு கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு என்பவை குறித்து எழுந்த கருத்து வேறுபாடே ஆகும்.

ஜே.வி.பி.யைப் பொறுத்து சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்கு பணி குறித்து அது எப்பொழுதும் எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. நோர்வே இலங்கையைச் சூழவுள்ள கடல் வளத்தைக் குறியாகக் கொண்டு செயற்படுகின்றது என்பதே அதன் குற்றச்சாட்டாகும். தற்பொழுது புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வடக்கு-கிழக்கு கடல் வளத்தைத் தனதாக்கிக் கொள்வதே என்ற ரீதியில் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது.

ஆனால், தற்பொழுது கண்காணிப்புக் குழுத் தலைவரை வெளியேறுமாறு உத்தரவிட்டதன் மூலம் ஜே.வி.பி.யினர் சனாதிபதியின் நடவடிக்கைகளில் திருப்தியுற்றிருக்கலாம். இதன் வெளிப்பாடாகவே விமல் வீரவன்ச வெளியிட்டிருந்த மகிழ்ச்சியும் கொள்ளத்தக்கதாகும். ஆனால், ஜே.வி.பி.யின் எதிர்பார்ப்பு இத்துடன் நிறைவேறிவிட்டதாக இல்லை. கண்காணிப்புக் குழுவினரையும், நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களையும் வெளியேற்றுவது வரையில் அவர்களின் அபிலாசைகள் நீண்டவை.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து, ஜே.வி.பி.யினரை மகிழ்ச்சி அடையவைக்க வேண்டிய தேவை தற்பொழுது ஏற்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, ஜே.வி.பி.யின் ஒத்துழைப்பு இன்றி அவர் தனது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யக் கூடியவராக அதாவது, பலமான நிலையில் அவர் இல்லை என்றே கூறுதல் வேண்டும்.

சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைப்பது குறித்துப் பேச்சுக்கள் நடத்தியபோது பெரும் விட்டுக் கொடுப்புக்களுக்கும், அதன் கோரிக்கைகளுக்கும் அனுசரணையான போக்கை வெளிப்படுத்துபவராக இருக்கவில்லை. சிறிலங்கா "சுதந்திரக்கட்சி தங்களைத் திண்ணையில் வைத்தே பேச விரும்புகின்றது" என ஜே.வி.பி.யினர் கவலை தெரிவிக்கும் அளவிலேயே சந்திரிகா குமாரதுங்க நடந்து கொண்டார்.

சனாதிபதி சந்திரிகா அவ்வாறு நடந்து கொண்டமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஜே.வி.பி. மீது அவர் பூரண நம்பிக்கை கொள்ளாது இருந்திருக்கலாம், அன்றி ஜே.வி.பி.யுடனான கூட்டு சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்திற்குப் பாதகமானது என அவர் கருதியிருக்கலாம் அன்றி தனது கணவரைக் கொன்றவர்களுடன் அரசியற்கூட்டணி வைத்துக் கொள்வதை அவரது மனச்சாட்சி ஏற்காது இருந்திருக்கலாம் அன்றி அவதூறு பேசப்படலாம் என அவர் கருதியிருக்கலாம். இவற்றை விட தனக்கு மக்களிடம் செல்வாக்கு உண்டு என்ற நம்பிக்கை கூடக் காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் எதிர்பார்க்கைகளுக்கும் அப்பால் சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காணும் சூழ்நிலை உருவாகியுள்ள நிலையிலும் அவரது எதிர்பார்க்கையைத் தகர்ப்பதாக மக்கள் ஆதரவு அவரது கட்சிக்கு சரிந்துள்ள நிலையிலும், ஐ. தே. முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி.யுடன் விட்டுக் கொடுப்புடன் கூட்டுச் சேருவதைத் தவிர அவருக்கு வழி ஏதும் இல்லாதும் இருந்திருக்கலாம்.

இந்நிலையில்தான், ஜே.வி.பி.யினரின் கோரிக்கைகளை வேறொரு வழியில் நிறைவு செய்யும் வகையில் சனாதிபதி சந்திரிகா இறங்கியுள்ளதாகச் சந்தேகிக்க வைக்கின்றது. எமது மதிப்பீடு சரியாயின் எதிர்காலத்திலும் ஜே.வி.பி.யினரின் கோரிக்கையை நிறைவேற்றச் சனாதிபதி இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் கூடும். இவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் கூட்டுச் சேர சிலவேளை உதவக் கூடும். ஆனால், நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை பயப்பதாக ஒருபோதும் இருக்கமாட்டாது.

# கலாச்சார விழாவில் நடந்த தாக்குதலுக்கு கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

கொழும்பில் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற தமிழ் - சிங்கள கலாச்சார விழாவைக் குழப்புவதற்கு காட்டுமிராண்டித்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது.

இவ் விழா எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் உயர்தரத்திலான கலாச்சார நிகழ்வு எனவும் இலங்கையின் பிரபல கலைஞர்கள் இதில் கலந்து கொண்டதாகவும் கம்யூனிஸ்ட் கட்சி அதன் செய்திக்குறிப்பில் கூறியுள்ளது. குழப்பத்தை ஏற்படுத்தியவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து தெளிவாக இக் கொடூர சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்களை அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது. அத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டவர்களும் ஊடகங்களினூடாகத் தெளிவாகக் காண்பிக்கப்பட்ட படங்களும் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளதாகவும் அக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது. சிங்கள ஆதிக்க வெறியர்களின் ஒரு பகுதியினரே இத் தாக்குதலை நடத்தியுள்ளனர். முழுச் சமூகத்தையும் காட்டுமிராண்டித் தனமான சகாப்தத்திற்கு மீண்டும் இட்டுச் செல்வதற்கு இலங்கையில் இன்னும் சில சக்திகள் இருக்கின்றன என்பதை இது நினைவூட்டுவதாக அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. இவ் அநாகரிக தாக்குதலானது மனித மற்றும் சனநாயக உரிமைகளை முற்றாக மீறுவதாகவும், சமாதான முயற்சியை சந்தேகத்திற்கு இடமில்லாமல் குழப்புவதாகவும் உள்ளதென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 32 பாவனைப் பொருட்களுக்கு காலாவதித் திகதி அறிவிக்கப் பணிப்பு

(கொழும்பு)

நுகர்வோர் பாதுகாப்புக் கருதி நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை 34 பாவனைப் பொருட்களுக்கு கார்த்திகை முதலாம் திகதியிலிருந்து விலை, உற்பத்தி திகதி, காலாவதித் திகதி என்பவை குறிப்பிடப்பட வேண்டுமென வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இறைச்சி, தகரத்திலடைக்கப்பட்ட மீன், பொதியாக்கப்பட்ட எண்ணெய், கோப்பி, சொக்கலேட், சிறுவர்களுக்கான சாப்பாடு வகைகள், ஐஸ்கிறீம், பட்டர் என்பன இதற்குள் அடங்குகின்றன.

# யாழ். இல் பொலித்தீன் பாவனையைத் தடுக்க சுகாதார சேவையினர் நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தமிழீழ சுகாதார சேவை நேற்று முதல் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அதிகரித்துவரும் பொலித்தீன் பாவனையும் அசேதனப் பொருட்களின் பாவனையும் சுற்றுப்புறச் சூழலின் சமநிலையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் அமுல்படுத்துவதற்கு சுகாதார சேவையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு முன் நடவடிக்கையாக யாழ். நகரப் பகுதிகளில் பொலித்தீன் பாவனைகளை மட்டுப்படுத்தும் விதத்திலான பதாதைகளைப் பொருத்தும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். (33)

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - நவ.10 இல்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தமிழீழ விளையாட்டுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்பட்டு வரும் தேசிய பெருவிளையாட்டுப் போட்டியின் 2004ஆம் ஆண்டிற்கான போட்டிகள் பெப்ரவரி 20இல் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற வெற்றிக் கேடயங்களுக்கான போட்டிகளுடன் கிளித்தட்டு, கபடி ஆகியன ஆண்-பெண் இருபாலாருக்கும், கரப்பந்தாட்டம் பெண்களுக்கும் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் இணைத்து கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது.

இதேவேளை கேணல் சங்கர் வெற்றிக் கேடயத்திற்கான மென்பந்தாட்டப் போட்டி இவ்வாண்டு கடினப்பந்து போட்டியாக நடாத்தப்பட்டுள்ளதாகத் தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்தனர்.

இந்தப் போட்டி மூன்றாவது தேசிய பெருவிளையாட்டுப் போட்டியாகும்.

# வேலையற்ற பட்டதாரிகள் 1250 பேருக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

ஆசிரியர் சேவைக்கு 1250 பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்வதென அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறிய கருத்துக்கு திறைசேரி அங்கீகாரம் அளித்துள்ளது.

விண்ணப்பங்களைக் கோரி தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. மேலும் 1500 ஆசிரியர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கல்வியமைச்சர் திறைசேரியிடம் கேட்டுள்ளார். புதிதாக நியமனம் பெறுவோர் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் 05 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

# முதலிடத்தில் ஹெய்டன் பொலக்

ப்ரைஸ் வோட்டர் கவுஸ் கூப்பர்ஸ் வெளியிட்டுள்ள டெஸ்ட் தரவரிசை பட்டியலில் சாதனை வீரர் மத்யூ ஹெய்டன் 895 புள்ளிகளுடன் துடுப்பாட்ட வரிசையில் முதலிடத்திலும் பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி வீரர் ஷேன் பொலக் 870 புள்ளிகளுடன் முதலிடத்திலும் உள்ளனர். ப்ரைஸ் வோர்ட்டர்ஸ் டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள வீரர்களின் விபரம் வருமாறு,

துடுப்பாட்டம், மத்யூ ஹெய்டன் (அவுஸ்) 895, 57.67: பிறைன் லாறா (மே.இ) 887, 51.55:ரிக்கி பொண்டிங் (அவுஸ்) 847, 52.73: ராகுல் டிராவிட் (இந்தியா) 809, 54.37: அடம் கில்கிறிஸ்ட் (அவுஸ்) 806, 60.25: இன்சமாம் உல்கக் (பாக்) 792, 49.41: சச்சின் டெண்டு ல்கர் (இந்தியா) 779, 56.57: மார்கஸ் ட்ரெஸ்கோதிக் (இங்கி) 774, 43.91: மார்க் கிச்சட்சன் (நியூசி) 765, 49.36: மைக்கல் வோகன் (இங்கி) 759, 47.76:

பந்துவீச்சு, ஷேன் பொலக் (தெ.ஆ) 870, 20.73: முத்தையா முரளிதரன் (இல) 861, 23.55: கிளென் மெக்ராத் (அவுஸ்) 831, 21.71: சொஹிப் அக்தர் (பாக்) 791, 25.08: ஜேசன் கிலெஸ்பி (அவுஸ்) 758, 24.55: ஹர்பஜன் சிங் (இந்தியா) 721, 27.53: டெரல் டஃபி (நியூசி) 692, 27.14: அனில்கும்ளே (இந்தியா) 679, 28.23: ஜக்கலிஸ் (தெ.ஆ) 673, 29.12: ஸ்டுவர்ட் மக்கில் (அவுஸ்) 667, 26.30:



# யாழ். வைத்தியசாலை தாதியர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு

1997 ஆம் ஆண்டிலிருந்து தமக்கு வழங்கப்படாத சம்பள ஏற்ற நிலுவைத் தொகையையும், அதற் கான வட்டியையும் வழங்கக் கோரி யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வுள்ளனர்.

சம்பள ஆணைக்குழுவினரால் 1997 ஆண்டு சம்பள சுற்றுநிருப அறிக்கையின் படி சம்பளம் வழங்க கூறப்பட்டபோதிலும் இன்னும் அது வழங்கப்படாததைத் தொடர்ந்து இப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முடிவு செய்துள்ளனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தாதிமார்கள் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும், கணக்காளர் ஆகியோருக்கு சுட்டிக்காட்டியும், இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததைத் தொடர்ந்து இது தொடர்பாக மனிதவுரிமை ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடு செய்துள்ளனர். இம் முறைப்பாடு பயனளிக்காத பட்சத்தில் அடுத்த வாரமளவில் இப்போராட்டத்தில் தாம் ஈடுபடப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (33)

## காங்கேசன்துறை, பலாலி மீனவர்கள்

# சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரிக்கை

காங்கேசன்துறை மற்றும் பலாலிப்பகுதி மீனவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி தொழில் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை வித்துள்ளனர்.

இப்பிரதேச மீனவர்கள் இடம் பெயர்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் மீண்டும் தமது சொந்த இடங்களில் தொழில் செய்யமுடியாதுள்ளமையால் தாம் இடம்பெயர்ந்து வாழும் பிரதேசங்களிலுள்ள மீன வர்களுடன் தங்கியிருப்பதால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக அவர்களுக்கும் தமக்குமிடையே பிணக்குகள் உருவாகியுள்ளதாகவும், இதனைத் தீர்ப்பதற்கு ஒரே வழியாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறி தொழில் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமெனக் கூறி யாழ். மாவட்ட கடற்படைத்தளத்தின் தலைமையகத்திற்கு இப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். (33)

# வடமராட்சி மணற்காட்டில் படையினர் புதிய முகாம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

வடமராட்சி மணற்காடு பிரதேசத்தில் படையினரால் புதிய முகாம் அமைக்கப்படுவது தொடர்பாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப் பிரதேசத்தில் படையினர் மக்களின் காணிகளை மையமாகக்கொண்டு புதிய முகாம் ஒன்றை அமைத்துவருவதால் தமது மீள்குடியமர்வு இயல்பு வாழ்விற்கு பாதகமாக அமையும் என்பதை சுட்டிக்காட்டி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர். இதேவேளை இம்முகாம் அமைக்கப்படும் பகுதிக்கு முன்னர் மக்கள் விறகு வெட்டுவதற்குச் சென்றனர். இம்முகாம் அமைக்கப்படும் பணி ஆரம்பமாகியவுடன் இப் பகுதிக்கு விறகு வெட்டச் செல்லவும் படையினர் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# யாழ். ராணுவச் சாரதிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

குடாநாட்டில் படையினரின் பாவனையின் கீழுள்ள இராணுவ வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க யாழ். படைத்தலைமை முற்பட்டுள்ளது.இதன் ஓர் அங்கமாக வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் இராணுவ பயன்பாட்டிலுள்ள வாகனங்களது சாரதிகளுக்கான எழுத்துப் பரீட்சையொன்று வரணி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இராணுவ பொலிஸாரது ஏற்பாட்டின் பேரில் இவ் எழுத்துப் பரீட்சை இடம்பெற்றிருந்ததாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக அண்மைக்காலமாக குடாநாட்டில் அதிகரித்து வருகின்ற இராணுவ வாகன விபத்துக்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் வருகின்றனர்.

இந்நிலையில் குடாநாட்டில் இராணுவப் பாவனையிலுள்ள வாகனங்கள் எவையும் மூன்றாம் நபருக்கான காப்புறுதியின்றி வீதிகளில் பயணிக்க முடியாதென யாழ்.நீதிமன்ற மேலதிக நீதவான் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து இராணுவ வாகனச் சாரதிகளுக்கு இராணுவத்தினரது சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க படையினர் முற்பட்டுள்ளனர்.

இதேவேளை வன்னியிலருந்து உரிய ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள்களை குடாநாட்டிற்கு எடுத்து வந்ததாக கூறப்படும் இரண்டு பொதுமக்கள் கொடிகாமம் பொலிசாரால் சோதனைச் சாவடியில் வைத்து பிடிக்கப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள் தண்டப்பணத்தை செலுத்த உத்தரவிட்ட நீதவான் சுப்பிரமணியம் பின்னர் அவர்களை விடுவித்துள்ளார். (27)

### வாகனத்தில்...

பந்தப்பட்ட வாகனம், வாகனத்தில் சென்ற அனைவரையும் கைதுசெய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட போது இவர்கள் தென் பகுதியைச் சேர்ந்த சிங்கள இனத்தவர்கள் என்றும், பரந்தன் பிரதேசத்தில் வீதிப்புனரமைப்பில் ஈடுபட்டு வரும் சதேன் குறூப் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகின்றது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி காவல் பணிமனையினர் தொடர்ந்து மேற்கொண்டு வருவதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### இடைக்...

பிரஸ்கார் மற்றும் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேற்படி திட்டவரைவினைப் பெற்றுக்கொண்ட நோர்வேத் தூதுவரும் குழுவினரும் நேற்று பிற்பகல் உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர். (சோ,லோ.)

### நியூசிலா...

தற்போதைய அமைதி நடவடிக்கைகளுக்கு நியூசிலாந்து எவ்வாறு உதவ முடியும் என்பது பற்றியும் புனர் நிர்மாணத்திற்கு எத்தகைய பங்கை வழங்க முடியும். தேவைகள் என்ன என்பது பற்றியும் அறிவதே தற்போதைய இந்தச் சந்திப்பின் நோக்கமென நியூசிலாந்து பா.உ.தெரிவித்தார். தனது கட்சி நியூசிலாந்தின் ஆளுங்கட்சியாக இல்லாத போதிலும் இந்த விடயங்கள் பற்றி வெளிநாட்டமைச்சருடன் கலந்துரையாடி நியூசிலாந்தை பங்களிக்கச் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். போரினால் இங்கு மக்கள் குறிப்பாக பெண்களும் சிறுவர்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதைத் தான் நேரடியாக கண்டறிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவர் வன்னியில் வளவளாப் பாதுகாப்பு பிரிவு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றின் செயற்பாடுகளைப் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ.)

### அம்பாறை...

மூலம் தமது நலன்களை அனுபவிக்க முனையும் சக்திகளைக் கண்டித்தும்,முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது சொந்த நலன்களை விடுத்து, சமூக நலன்கள் மீது அதிக அக்கறை செலுத்தக் கோரியும் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் அறிவித்திருந்தது.

மேலும் நிந்தவூர் பிரதான வீதியில் வீதித்தடை போடப்பட்டிருந்த இடத்தில் வைத்து காரைதீவு விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்த ஏ.மு. கைமீன் எனும் 17 வயது இளைஞன் சிகிச்சைக்காக நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரான் பெரேரா தலைமையிலான பொலிஸ் குழுவினர் நிந்தவூர் மாவட்ட வைத்திய சாலைக்கு விரைந்து தாக்குதலுக்குள்ளான இளைஞனின் வாக்கு மூலங்களைப் பெற்றனர்.

நேற்றைய ஹர்த்தால் பூரண வெற்றிகரமாக அமைந்ததாக தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ சமூகம் கருத்து தெரிவித்தது. (23)

# 'அக்கினிப் பறவைகள்' இன்று கிளிநொச்சியில் வெளியீடு

மகளிர் படையணியின் வரலாற்றைச் சித்தரிக்கும் அக்கினிப் பறவைகள் (பாகம்-1) விவரணச் சித்திரம் கிளிநொச்சி கனிஷ்டமகா வித்தியாலயத்தில் இன்றுமாலை 4.30 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிதர்சனம் மகளிர் பிரிவு தயாரித்துள்ள இவ் விவரணச் சித்திரம் நிகழ்வின் இறுதியில் திரையிட்டுக்காண்பிக்கப்படவுள்ளது.

# அமெரிக்கா செல்வோரிற்கு புதிய நடைமுறை அறிவிப்பு

கொழும்பிலுள்ள ஐக்கிய அமெரிக்க தூதரகம் அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக புதுத் திட்டதை வெளியிட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவிற்கு விசாவுடன் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் 2 கைவிரல் அடையாளங்கள் எடுக்கப்படுவதோடு அமெரிக்க விமான நிலையத்திலும் துறைமுகத்திலும் நுழையும் போது புகைப்படம் எடுக்கப்படும். இந்நடைமுறை வரும் தை மாதம் 5ஆம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்படும். இம்முறையானது 115 விமான நிலையங்களிலும் 14 துறை முகங்களிலும் 2004 இல் அமு லில் இருக்கும். 2005-2006 ற்குள் எல்லைப்பகுதிகளிலும் கடைப்பிடிக்கப்படும் ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பை அதிகரிப்பதன் மூலம் ஒழுங்கு முறையான பிரயாணத்தை துரிதப்படுத்துவதே இதன் நோக்கம் என எல்லை பாதுகாப்புச் செயலாளர் கட்சிசன் கூறியுள்ளார்.

# இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி மீன் பிடிக்கின்றன!

## சிறிலங்காக் கடற்படை அரசாங்கத்திடம் முறையீடு

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாக சிறிலங்கா கடற்படையினர் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக இலங்கையின் பெருமளவு மீன் வகைகள் அவர்களால் எடுத்துச் செல்லப்படுவதாக கடற்படை கூறியுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் சுமார் 100 இந்தியப் படகுகள் தலைமன்னார் கடலில் மீன் பிடித்ததாகவும், தமது எச்சரிக்கையையும் பொருட்படுத்தாத இந்தியப் படகுகள் நேற்று நண்பகலே இலங்கைக் கடற்பரப்பில் இருந்து விலகிச் சென்றதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (32)

## -பொலிசார் தடியடி-

# ரஜரட்ட பல்கலை மாணவர் 67 பேர் ஆஸ்பத்திரியில்

ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 67பேர் அனுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விவசாய பீடத்திற்காக நீண்டகாலமாக மூடியுள்ள காலியபுர ஆசிரியர் விடுதியை தமக்கு தருமாறு கோரி நேற்று மாணவர்கள், அந்த கட்டடத்தைக் கைப்பற்றினர். நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் அவர்கள் அங்கிருந்து விலகிச் செல்லாமையால், பொலிசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர் இதில் 80 மாணவர்கள் வரை காயமடைந்தனர். (32)

# 4 மீனவரைக் காணவில்லை

பொலநறுவை அரலங்கவிலவில் இருந்து 4 மீனவர்கள் காணமல் போயுள்ளனர். இவர்கள் நேற்று இரவு மீன்பிடிக்கச் சென்ற போதும், இதுவரை வீடு திரும்பவில்லை. மாதுறு ஓய பகுதிக்குச் சென்ற இவர்கள் வழிதடுமாறிச் சென்றிருக்கலாம் என பொலநறுவை பொலிசார் சந்தேகிக்கின்றனர். (32)

காணவில்லை



சண்முகராஜா ஜெயராஜா

498/8 தருமபுரம்என்னும் முகவரி கொண்ட சண்முகராஜா ஜெயராஜா (மோகன்) என்று அழைக்கப்படும் ஆட்டோ சாரதி (ஜீவனின் தம்பி) 27-10-2003 அன்று NP. G.C. 4067 இலக்கமுடைய ஆட்டோவுடன் இவரைக் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ச. ஜீவன்
498/8 தருமபுரம், பரந்தன்.

(சி-8685)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.